

# நம்பிக்கை வாக்கு

முத்து

PUBLIC LIB
7 - JAN 19

# நம்பிக்கை வாக்கு

தமிழக முதல்வர்

## டாக்டர் மு.கருணாநிதி

253

CONNEMARA PUBLIC LIBRARY
7 - JAN 1973
MADRAS

# பதிப்புரை

தமிழக அமைச்சரவையின் மீது நம்பிக்கை கோரும் தீர்மானம் தமிழ்நாடு சட்டப்பேரவையில் 7-12-1972 அன்று கொண்டுவரப்பட்டது. அமைச்சரவை மீது நம்பிக்கை உண்டு என்ற தீர்மானத்தை முன்மொழிந்து முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்கள். அதன் மீது, டிசம்பர்த் திங்கள் 7, 8, 9 தேதிகளில் திராவிட முன்னேற்றக் கழகம்' முஸ்லீம் லீக், ஃபார்வர்டு பிளாக், ஸ்தாபனக் காங்கிரஸ், சுதந்திரா ஆகிய கட்சிகளின் சார்பில் 24 உறுப்பினர்கள் உரையாற்றினார்கள். விவாதத்திற்குப் பதிலளித்து 11-12-1972 அன்று தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையினைத் தொகுத்து, வழக்கம்போல் சிறு நூலாக வெளியிட்டுள்ளோம்.

இந்தச் சிறு நூல் 'தமிழரசு' 1-1-1973 இதழின் இலவச இணைப்பாக வெளிவருகிறது. தமிழ் மக்களுக்குப் பயன் தரும் எனப் பெரிதும் நம்புகிறோம்.

சென்னை-9, செய்தி—மக்கள் தொடர்புத் துறை,
29-12-72. தமிழ்நாடு அரசு.

109/110 —1a

PUBLIC LIBRARY
7 - JAN
MADRAS

# நம்பிக்கை வாக்கு

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, கடந்த 7-ஆம் நாள் அன்று தொடங்கிய நம்பிக்கை கோருகின்ற தீர்மானத்தின் மீதான விவாதம் 24 மாண்புமிகு உறுப்பினர்களால் விவாதிக்கப்பட்டு, இன்று என்னையும் சேர்த்து 25 பேர் இந்த விவாதத்தில் கலந்து கொள்ளுகின்ற சூழ்நிலை உருவாகியிருக்கின்றது. 2-ஆம் தேதி அன்று இந்தப் பேரவை கூடியபோது, பேரவையிலே எதிர்த் தரப்பிலேயுள்ள ஒரு சில உறுப்பினர்கள், கவர்னர் பெருமான் அவர்கள் இந்த மன்றத்தினுடைய கூட்டத்தை புரோரோக் செய்து, மீண்டும் ஒரு தேதியை அறிவித்திருப்பது, உயர்நீதி மன்றத்தில் விவாதத்திலிருக்கிற நேரத்தில் இந்தப் பேரவை கூடலாமா, இந்தப் பேரவையிலே நடைபெறுகிற நிகழ்ச்சிகளெல்லாம் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு, முன்னாள் சபாநாயகர் திரு மதியழகன் அவர்கள் தொடர்ந்த வழக்கின் அடிப்படையில் அவருக்குச் சாதகமாக முடிந்து விடுமானால், நடவடிக்கைகள் அனைத்தையும் ரத்துச் செய்துவிட வேண்டிய நிலைமை ஏற்படுமே, ஏன் வீண் காலதாமதம், கால விரயம், பண விரயம் ஏற்படுகின்ற அளவுக்கு இந்தப் பேரவையை நடத்த வேண்டும்? என்கின்ற வினாக்களையெல்லாம் எழுப்பினார்கள். இன்றையத்தினம் அந்த வினாக்களுக்கெல்லாம் உற்ற விடை

கிடைத்து, உயர் நீதிமன்றத்திலே முன்னாள் பேரவைத் தலைவர் நண்பர் மதியழகன் அவர்கள் தொடர்ந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது (பலத்த கைதட்டல்) என்ற முடிவு இந்தப் பேரவையின் நிகழ்ச்சிகள் எதுவும் ரத்து செய்யப்பட மாட்டா என்கின்ற உறுதியோடு, நாம் அவை வரும் இதுவரையிலே கலந்து கொண்டு ஆற்றிய உரைகளும், இனி நடத்தவிருக்கின்ற விவாதங்களும் செல்லுபடியாகும் என்ற நிலையிலே, வழக்குத் தொடர்ந்தவர் வழக்குச் செலவையும் தர வேண்டுமென்ற அளவில் தீர்ப்பு வழங்கப் பட்டிருக்கிறது (பலத்த கைத்தட்டல்). இந்த அவையில் நம்பிக்கை கோருகின்ற தீர்மானத்தை ஏன் கொண்டுவர வேண்டுமென்ற வினாவினைக் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் மதிப்பு மிக்க நாடார் அவர்கள் இங்கு மீண்டும் ஒரு முறை எழுப்பினார்கள். சுலபமாக இதற்கு விடை காணலாம்.

## கொண்டுவந்த காரணம்!

அதைக் கொண்டுவந்த காரணத்தாலேதான் கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் டாக்டர் ஹாண்டே அவர்களும், கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் திரு பொன்னப்ப நாடார் அவர்களும் இங்கே பல பிரச்சினைகளைப்பற்றி விவாதிக்க முடிந்தது. அதைவிட வேறு ஒரு பெரிய காரியத்திற்கு என்று கருதி இத்தீர்மானம் கொண்டு வரப்படவில்லை. காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களும், உறுப்பினர்களும்; அதைப்போலவே சுதந்திராக்கட்சித் தலைவர் அவர்களும், உறுப்பினர்களும்; இந்த மன்றத்திலே இருக்கின்ற தோழமைக் கட்சி உறுப்பினர்களும், தலைவர்களும்; அதைப்போலவே கம்யூனிஸ்ட் கட்சி, அண்ணா தி.மு.க. ஆளும் காங்கிரஸ் கட்சித் தலைவர்களும், இந்த நம்பிக்கை கோருகின்ற தீர்மானத்தின் மூலம் அவர்கள் இந்த அரசின்மீது எவ்வளவு குற்றச்சாட்டுக்களைச் சுமத்துகிறார்களோ அதற்கான நல்ல வாய்ப்பினைத் தாராளமாக வழங்க வேண்டுமென்ற அடிப்படைக் கருத்தின் காரணமாகத் தான் இந்த நம்பிக்கை கோருகின்ற தீர்மானம் முன்மொழியப் பட்டு, இந்த மாமன்றத்தில் நான்கு நாட்களாகக் காரசாரமான விவாதமாகவும் கருத்துக்கள் நிறைந்த விவாதமாகவும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த விவாதத்திலே கலந்துகொண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் 24 பேர்களுக்கும் நான் என்னுடைய நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அவர்கள் கூறிய பல சொற்கள் விவாதங்கள் இந்த அரசுக்கு விரோதமானவை, இந்த அமைச்சரவைக்குப் புறம்பானவை. அவை எங்களுடைய உள்ளங்களை ஓரளவு புண்படுத்தக்கூடியனவாக அமைந்திருந்தாலும் நாங்கள் இவைகளை எல்லாம் இந்த மாமன்றத்திலே

எப்படி விவாதிக்க வேண்டுமென்ற உணர்வு பெற்றவர்கள் என்ற காரணத்திஞல் அவைகளை வரவேற்கிருேம். அதற்கேற்றவகையிலே அமைச்சர் பெருமக்களும் அவர்களுடைய விளக்கங்களைத் தெரிவித்திருக்கிருர்கள்.

இந்த நம்பிக்கை கோருகின்ற தீர்மானத்தை ஏதோ உள்நோக்கத்தோடு கொண்டு வந்திருக்கிருேம் என்று திரு பொன்னப்ப நாடார் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வேன், எந்த உள் நோக்கத்தோடும் இந்தத் தீர்மானம் கொண்டு வரப்படவில்லை. நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திற்கு இந்த அமைச்சரவை பயந்து, நொடிந்து, ஓடி ஒளிந்து விடும் என்று எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆகவேதான், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது அவர்கள் என்ன கருத்துக்களைக் கூறுவார்களோ அந்தக் கருத்துக்களைக் கூறுவதற்கு ஒரு வாய்ப்பாகத்தான் இந்த நம்பிக்கை கோரும் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறதே அல்லாமல் வேறல்ல, என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## என்ன அடிப்படை ?

இந்த அரசு மீது நம்பிக்கை இருக்கிறதா, இல்லையா என்பதை எந்த அடிப்படையிலே கணக்கிட்டுப் பார்ப்பது என்பதை மாத்திரம் நாம் புரிந்து கொள்ள வேண்டும். எதிர்க்கட்சிக்காரர்கள் எடுத்துச் சொல்லிய குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் கடந்த ஓராண்டு அல்லது இரண்டாண்டு காலமாகத் தமிழகம் பூராவிலும் திராவிட முன்னேற்றக் கழகம் தனது விளக்கத்தைத் தந்திருக்கிறது. மீண்டும் மீண்டும் அதைப்பற்றி இங்கே சொல்லிக் கொண்டிருக்கிருர்களே அல்லாமல் புதிதாக எதுவும் சொல்லப்பட்டதாகத் தெரியவில்லை.

கொள்கை ரீதியாக எடுத்துக் கொண்டால், எவை எவைகளை இந்த மன்றத்திலே பேசுவது, எவை எவைகளைப் பேசக்கூடாது என்ற நியதியை நாம் கடைப்பிடிக்க வேண்டும். சட்ட மன்றத்திலே நடைபெறும் விவாதங்கள் வெளியிலே நடைபெறுகின்ற சொற்பொழிவுகளைப் போன்றவை அல்ல என்பதை வற்புறுத்திச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த அரசு செய்யும் காரியங்களில் எது தவறு, எது முறைகேடானது என்பதை எடுத்துக் கூற எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் உரிமை உண்டு. அவர்கள் அப்படி எடுத்துக் கூறுகின்ற நேரத்தில் ''நீங்கள் யார் எடுத்துச் சொல்ல, நாங்கள் யார் அதைக் கேட்க?'' என்ற ஆணவக் குரலில் ஒரு நாளும் நாங்கள் கேட்டதில்லை ; கேட்கப் போவதுமில்லை.

அந்த ஆணவம் எங்களிடம் இல்லை. சொல்வது யாராக இருந்தாலும் அடக்கத்தோடும், அமைதியோடும் கேட்டு, அதற்குத் தகுந்த முறையிலே செயல்படும் பண்பாட்டுடன் தான் நாங்கள் இருக்கிறோம். மாற்றாருக்கும் மதிப்புக் கொடுக்கின்ற அரசியல் நாகரிகத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்குமே கடைப் பிடித்துவரும் என்பதை மீண்டும் மீண்டும் நான் வற்புறுத்திச் சொல்லிக் கொள்கிறேன்.

நாங்கள் ஆட்சிக்கு வந்த இந்த ஐந்தாண்டுக் காலத்திலே என்னென்ன செய்திருக்கிறோம், என்னென்ன செய்யத் தவறிவிட்டோம் என்பதை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். தேர்தல் நேரத்தில்மக்களுக்கு அளித்தவாக்குறுதிகளை நிறைவேற்றவில்லையா? இந்தியாவில் இருக்கிற பல்வேறு மாநிலங்களோடும் தமிழகத்தை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். தமிழ்நாட்டில் கடந்த காலத்தில் ஏற்பட்டிருந்த வளர்ச்சிக்கும் இன்றைக்குக் கழக அரசு வந்த பிறகு ஏற்பட்டிருக்கும் வளர்ச்சிக்கும் உள்ள வேறுபாட்டினையும் உணர வேண்டும்.

இந்தியாவிலே வெள்ளையர் ஆட்சிக் காலத்திலேயே ஒரு சில மாநிலங்கள் நல்ல வளர்ச்சி பெற்றிருந்தன. அந்த மாநிலங்களிலே ஒன்று மராட்டிய மாநிலம் என்பதை நாம் எல்லாம் நன்கறிவோம். நம்முடைய தமிழ் நாட்டிலே 20 ஆண்டுக் காலக் காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றது. அதற்குப் பிறகு 1967-ஆம் ஆண்டிலே எங்களை எல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள். பேரறிஞர் அண்ணாவின் வழியைப் பின்பற்றி இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருந்து வருகிறது.

## மற்ற மாநிலங்களோடு......

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு தமிழகத்தை மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்ப்போமானால், தமிழகத்தின் வளர்ச்சி எந்த அளவுக்கு முன்னேறி இருக்கிறது என்பதை உணர முடியும். இங்கே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு—சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கின்ற மக்களுக்கு—பிற்பட்ட சமூகத்தினருக்கு —ஏழை எளிய மக்களுக்கு—பாட்டாளி மக்களுக்கு—விவசாயப் பெருங்குடி மக்களுக்கு —ஏராளமான நன்மைகள் செய்யப்பட்டிருக்கின்றவா இல்லையா என்பதை எண்ணிப் பார்த்திட வேண்டும். ஒரு அரசு நல்ல அரசா இல்லையா என்பதற்கு எது அளவுகோல்? நம்முடைய டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்

டார்கள் ; உள்ளே இருக்கின்ற பெரும்பான்மை உறுப்பினர்களை வைத்துக் கொண்டு உங்களுக்குப் பெருத்த ஆதரவு இருக்கிறது என்று எண்ணி விட முடியாது. நாட்டிலே இருக்கின்ற மக்களில்—வெளியே இருக்கிறவர்களில் 100-க்கு 90 பேர் அல்லது 10-க்கு 9 பேர் உங்களை நம்பவில்லை ; உங்களை ஆதரிக்கவில்லை, என்று சொன்னூர்கள்.

பாராளுமன்றத்திலேயும் சரி, சட்ட மன்றத்திலேயும் சரி, இருக்கின்ற உறுப்பினர்களில் பெரும்பான்மை யோரைக் கணக்கிலே எடுத்துக் கொண்டுதான் ஆட்சியின் பலத்தை நிர்ணயிப்பது வழக்கம். ஆனுல் டாக்டர் ஹாண்டே அவர்கள் அதை ஏற்றுக் கொள்ள மறுக்கிருர். ஹாண்டே ஒரு டாக்டர். ஒருவனுக்குக் காய்ச்சல் வந்தால், அவனுக்கு எத்தனை டிகிரி காய்ச்சல் அடிக்கிறது என்று பார்க்க வேண்டுமென்ருல் தெர்மா மீட்டரை வைத்துப் பார்த்துத்தான் சொல்வார். அதைப்போல இந்த நாட்டிலும் மக்கள் ஆதரவு தெரிவிக்கிருர்களா இல்லையா என்பதை 1971-ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலிலே திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பெரும்பான்மை வாக்கு என்னும் தெர்மாமீட்டரை வைத்துக் கணக்கெடுத்து ஆளத் தகுதி உடையவர்கள் தான் என்று அனுப்பியிருக்கிருர்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** உங்கள் தெர்மா மீட்டர் பழசு. அது கெட்டுப்போய்விட்டது என்று சொன்னேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி :** என்னுடைய தெர்மா மீட்டர் பழசா புதுசா என்பதை டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு ஜுரம் வரும்போது வைத்துப்பார்த்தால் தெரியும் (பலத்த ஆரவாரம்). ஆகவே, மக்கள் மன்றத்தினருடைய ஆதரவு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருக்கிறதா இல்லையா என்பதை இந்த மன்றத்தினருடைய ஆதரவில் இருந்து தெரிந்து கொள்ளலாம். முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவளித்துத்தான்—நம்பிக்கை இருக்கிறது என்பதற்கு அடையாளமாகத்தான்—எங்களுக்கு மக்கள் வாக்களித்தார்கள். 1967-லும் வாக்களித்தார்கள், 1971-லும் வாக்களித்தார்கள். அதன் மூலம் மக்களின் முழு நம்பிக்கையையும் மகோன்னதமான முறையில் எங்களுக்குத் தெரிவித்திருக்கிருர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மக்களுடைய அந்த ஆதரவினுல்தான் நாங்கள் இங்கே வீற்றிருக்கிருேமே அல்லாமல் பதவிக்காகவோ, அதிகாரத்திற்காகவோ, அந்தஸ்திற்காகவோ, கௌரவத்திற்காகவோ நாங்கள் இங்கே இல்லை. எந்த மக்கள் எங்களை நம்பி இங்கே அனுப்பி வைத்தார்களோ, அந்த மக்களுக்காக என்றும் உதவ, உழைக்க, நாங்கள் கடமைப்பட்டவர்களாக இருக்கிருேம். அதற்காக எங்கள் கடமையை நிறைவேற்றிக்கொண்டிருக்கிருேம்.

### அண்ணா தலைமையில்......

பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட நேரத்திலே இந்த மன்றத்திலே நிதிநிலை அறிக்கையை வைத்துவிட்டுப் பதிலுரை பகர்கின்ற நேரத்தில், அண்ணா அவர்கள் சொன்னார்கள், ''என்னுடைய அரசு தமிழகத்தில் இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்கள், பின் தங்கிய மக்கள், நடுத்தர மக்கள், ஏழை எளிய மக்கள்—அவர்களுடைய வாழ்க்கையைச் செம்மைப் படுத்துவதற்கான திட்டங்களைத் தீட்டும்'' என்று சொன்னார்கள்.

''தமிழ் தழைக்க, தமிழ்க்குலம் செழிக்க, என் அரசு பாடுபடும்'' என்று எடுத்துக் காட்டினார்கள். அவர் காட்டிய வழியில் நின்று நாங்கள் பணியாற்றுகிறோமா, இல்லையா ?

சென்னை இராஜ்யம் என்ற பெயர் அண்ணா அவர்கள் காலத்தில் தமிழ்நாடு என்று தனக்கே உரிய பெயரைப் பெற்றது. இந்த மாமன்றமே அன்றைக்கு மகிழ்ச்சிக் கடலில் ஆழ, இன்றைக்கு மைசூர் மாநிலத்தவர்களும் நம் வழியைப் பின்பற்றுகிறது, அன்றைக்கே சென்னை இராஜ்யம் என்ற பெயர் மாற்றப்பட்டு நாம் பிறந்த மண்ணுக்குத் தமிழ்நாடு என்கிற பழைய பெயர், நம்முடைய இலக்கியங்களில் காணப்படுகின்ற பெயர், நம் உரிமையைக் காக்கின்ற பெயர் சூட்டப்பட்டது.

1937-ஆம் ஆண்டு முதல் ஏறத்தாழ முப்பது, முப்பத்தைந்து ஆண்டுக்காலமாக நடைபெற்று வந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கு முடிவு காணுகின்ற வகையில் அண்ணன் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில்—இன்றுமட்டுமன்றி, இனிமேல் தமிழ்நாட்டில் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டுக்குத்தான் இடம், தமிழ் நாட்டுப் பள்ளிக்கூடங்களில் இந்தி மொழிக்கு இடமில்லை என்கிற தீர்மானத்தை முன்மொழிந்து நிறைவேற்றியதும் இதே மன்றத்தில்தான்; திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் என்பதை மறந்துவிட முடியாது.

சுயமரியாதைத் திருமணம் என்கிற சமுதாயச் சீர்திருத்தத் திருமணங்களைச் சட்டப்படி செல்லுபடியாகத் தக்கதாகச் செய்ய வேண்டும் என்பதாக எதிர்வரிசையில் இருந்து நாங்கள் கூறி வாதிட்டுவந்த நேரத்தில் எல்லாம் அப்போதிருந்த ஆட்சியாளர்களால் அது புறக்கணிக்கப் பட்டது. நாங்கள் ஆட்சிப்பொறுப்பை ஏற்ற பிறகுதான் அண்ணன் அவர்கள் தலைமையில் சுயமரியாதைத் திருமணம் சட்டப்படி செல்லுபடியாகும் என்கிற புரட்சிகரமான

கருத்துக்குச் சட்ட வடிவம் கொடுத்ததும் இந்தத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் என்பதை யாரும் மறுந்துவிட முடியாது.

புஞ்சை நிலங்களுக்கு, மானாவாரி நிலங்களுக்கு, அடிப்படை நிலத்தீர்வை நீக்கப்பட்டதும் முன்னேற்றக் கழக ஆட்சியில் தான்.

நஞ்சை நிலங்களுக்கும், ஐந்து ஏக்கருக்குள் நிலம் இருக்குமானால், அந்த 5 ஏக்கராவுக்கும் அடிப்படைப் புஞ்சைத் தீர்வை நீக்கப்படும் என்று செய்ததும் முன்னேற்றக் கழக ஆட்சியில்தான்.

நகர்ப்புற நிலங்களுக்கு * ஒரு கிரவுண்டும், அதற்குக் குறைவாகவும் நிலம் உள்ளவர்களுக்கு நகர்ப்புற நிலவரியில் இருந்து விலக்களிக்கப்பட்டதும் கழக ஆட்சியில் தான். மேலும் கூட இன்னும் சில சலுகைகளை அளித்து ஒரு சட்டத்தையே கொண்டுவந்து நிறைவேற்றலாமா என்ற யோசனையும் முன்னேற்றக் கழக அரசுக்கு இருந்து வருகிறது என்பதை நான் இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஐந்தாயிரத்திற்குக் குறைவாக ஆண்டு வருமானம் உள்ளவர்களுக்கு, அவர்கள் வாங்கிய கடனுக்கு நிவாரணம் அளிக்கப்பட்டு, வாங்கிய கடனைப் போல இரண்டு பங்கு வட்டி செலுத்தியிருந்தார்கள் என்றாலும், வாங்கிய கடனைப்போல அசலும் வட்டியும் செலுத்தியிருக்கிறார்கள் என்றாலும், அந்தக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டும், வட்டியும் 1—3—1972-க்குப் பிறகு 9 சதவிகிதம் என்ற அளவிலேயே கணக்கிடப்பட வேண்டும் என்று நிர்ணயித்தும்—நடுத்தர மக்களுக்கு, ஏழை மக்களுக்குக் கடன் நிவாரணம் அளித்த அரசும் முன்னேற்றக் கழக அரசுதான்.

15—2—1971 முதல் ஏற்கெனவே 30 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்று இருந்த நில உச்சவரம்பை 15 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்பதாகக் குறைத்ததும் முன்னேற்றக் கழக அரசுதான். முன்பு இருந்த விதிவிலக்குகள் கரும்புப் பயிருக்கு, மலைப்பகுதி நிலத்திற்கு, மேய்ச்சல் நிலத்திற்கு, கால்நடை வளர்ப்புப் பால் பண்ணைக்கு அளிக்கப்பட்டிருந்த விலக்குகள் நிலச்சீர்திருத்தத்தின் அடிப்படையில் ரத்து செய்யப்பட்டதும் முன்னேற்றக் கழக ஆட்சியில்தான். அறக்கட்டளைக்கும் புதிய உச்சவரம்பை நிர்ணயித்ததும் முன்னேற்றக் கழக ஆட்சியில்தான்.


---

* இரு கிரவுண்டாகச் சட்டத்திருத்தம் இப்போது செய்யப்பட்டுள்ளது.

சமய அறக்கட்டளைக்கு என்று 1—3—1972-க்குப் பிறகு நிலங்களைப் புதியதாக வாங்கக்கூடாது என்று ஆணை பிறப்பிக்கப்பட்டதும் முன்னேற்றக் கழக ஆட்சியில் தான்.

## ஒளி வழங்கல்

இருள் அடைந்து கிடந்த தமிழகத்திலுள்ள பல்வேறு கிராமங்கள் 1973-ஆம் ஆண்டுக்குள் மின்னொளி பெற்றாக வேண்டுமென்கிற சபதத்தை எடுத்துக்கொண்டு மின் வாரியத்துறை அமைச்சர் அவர்களுடைய ஒத்துழைப்போடும், மின் வாரியத் துறை அலுவலர்களின் உறுதுணையோடும், மின்வாரியத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுடைய உறுதுணையோடும் இன்றைக்கு வேக வேகமாக எல்லாக் கிராமங்களுக்கும் மின் ஒளி வழங்குகிற திட்டத்தை நிறைவேற்றி வருவது முன்னேற்றக் கழக அரசுதான். தமிழகத்தில் உள்ள மொத்தக் கிராமங்கள், குக்கிராமங்கள் 61,393 ஆகும். அதில் 1933-ஆம் ஆண்டு முதல், அதாவது மின்சாரம் முதன் முதலாகத் தமிழகத்தில் நுழைந்த ஆண்டில் இருந்து 1967 வரை மொத்தமுள்ள 61,393 கிராமங்களில், மின்னொளி வழங்கப்பட்டிருந்த கிராமங்கள் 20,250 தான். 1973க்குள் தமிழகத்திலுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் மின்னொளி வழங்கப்படும் என்கிற மின்னொளித் தீவிரத்திட்டத்தை இந்த அவையில் நான் அறிவித்த பிறகு , இந்த ஐந்தாண்டுக் காலத்தில் மட்டும் மின்னொளி பெற்றுள்ள கிராமங்கள் 38,474 ஆகும். 1933-ஆம் ஆண்டு முதல் 1967-ஆம் ஆண்டு




வரை—34 ஆண்டுக் காலத்தில் தமிழகத்தில் மின்னொளி வழங்கப்பட்டிருந்த கிராமங்கள் 20,250 தான். ஆனால் கடந்த ஐந்தாண்டுக்குள்ளாக முன்னேற்றக் கழக ஆட்சியில் மின்னொளி வழங்கப்பட்ட கிராமங்கள் மட்டும் 38,474 ஆகும். ஆக, தமிழகத்தில் மட்டும் 58,724 கிராமங்கள் மின்னொளி அளிக்கப்பட்டுவிட்டன. மிச்சமிருப்பது மூவாயிரத்திற்கும் உட்பட்ட கிராமங்களே என்கிற நிலையை அடைந்திருக்கிறோம்.

அடுத்து, தமிழகத்திலுள்ள அரிசனக் காலனிகள் 23,096 ஆகும். 1933-ஆம் ஆண்டு முதல் 1967-ஆம் ஆண்டு வரை மொத்தமுள்ள 33 ஆயிரம் அரிசனக் காலனிகளில் மின்னொளி வழங்கப்பட்டிருந்த அரிசனக் காலனிகள் 4,354 தான். ஆனால் இந்த ஐந்தாண்டுக் காலத்தில் கழக ஆட்சியில் 18,036 அரிசனக் காலனிகள் மின்னொளி வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை நாம் மறந்துவிட முடியாது. மிச்சமிருப்பது ஆயிரம் தான்.

Dr. H. V. HANDE : These statistics do not cover the frequent and fantastic break-down of electricity all over the State, especially in the city of Madras. There is sudden loss of power, increase and decrease in voltage and it is also bad and all this happens because of expansion and so in giving statistics, that also should be covered.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: செய்து வருகிற பெரிய காரியத்தில் இடையில் ஏற்படுகிற குறைபாடுகள் குறித்துப் பேசுகின்றார்கள். அவை சமீபத்தில் சம்பந்தப் பட்ட அதிகாரிகளிடத்தில் சுட்டிக்காட்டப்படுகிற நேரத்தில் அந்தக் குறைபாட்டைக் களைவதற்கு மின்வாரியம் தயாராய் இருக்கிறதென்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தமிழகத்தில் பிச்சைக்காரர்களுடைய மறுவாழ்வுத் திட்டம் என்று தொடங்கியபோது அது சிலருக்குச் சாதாரணமாகத் தோன்றியிருக்கலாம். ஆனால் வேறு எந்த மாநில அரசும் அதுபற்றி எண்ணிப்பார்க்காத நேரத்தில் முன்னேற்றக் கழக அரசுதான், பிச்சைக்காரர்கள்தானே— அதுவும் தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள்தானே—என்று அலட்சியப் படுத்தாமல், சமுதாயத்திற்கே அவக்கேடாக இருக்கிற அந்தப் பிரச்சினையில் தன்னுடைய முழுக்கவனத்தையும் செலுத்தியிருக்கிறது. இன்றைக்குப் (பருகூர், பரனூர், உளுந்தூர்ப்பேட்டை புதுக்கோட்டை) ஆகிய நான்கு இடங்களில் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்கள் அமைக்கப்பட்டு விட்டன. இந்த ஆண்டு (தஞ்சை, கோவை, சேலம், தர்மபுரி, மதுரை, நெல்லை) ஆகிய இடங்களில் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள் அமைக்கப்பட்டு, மொத்தமுள்ள இந்தப் பத்து இல்லங்களும் முடிந்தவுடன் 5 ஆயிரம் தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் அங்கே மறுவாழ்வு பெறுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொண்டிருப்பது இந்த முன்னேற்றக் கழக அரசுதான். இந்தத் திட்டத்தினுடைய வெற்றிக்குப் பிறகு மிச்சமுள்ள பிச்சைக்காரர்கள்—தொழுநோயால் பாதிக்கப்படாமல் இருக்கிற பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு பெறுகிற திட்டத்தையும் இந்த அரசு தீட்ட இருக்கிறது.

கண்ணொளி வழங்குகின்ற திட்டம், சிலரால் கேலி செய்யப் படலாம். சிலர், விளம்பரத்திற்காக நடத்தப்படுகிற தென்று கருதலாம். நான் உண்மையாகச் சொல்கிறேன்..




அதற்கு விளம்பரம் நிரம்பத்தேவை. பட்டிக்காட்டில் இருக்கிற பாமர மக்கள், கண் பழுதுபட்ட பாமர மக்கள், பழுதுபட்ட கண்ணில் ஒளியைப் பெறுவதற்கு இப்படிப்பட்ட ஒரு பாதை இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள அதிக அளவில் விளம்பரம் தேவைப்படுகிறது. கிட்டத்தட்டத் தமிழகத்தில் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் எடுத்த கணக்கின்படி 10 லட்சம் பேர் கண்ணொளி மங்கியவர்கள் இருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் வயது முதிர்ந்தவர்கள். இந்த ஆண்டு ஒரு லட்சம் பேர்களுக்காவது கண்ணொளி வழங்குவது என்கிற

தீவிரத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மனத் துணிவோடு ஜூன் 3-ஆம் தேதி முதல் இந்தத் திட்டம் தமிழகத்தில் தொடங்கப்பட்டது. ஜூன் 3-ஆம் தேதி துவங்கிய திட்டம்—இதுவரை கண்ணொளி வழங்குகிற முகாம்களை 26 இடங்களில் நடத்தியிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: கண்ணொளி வழங்குவதில் ஆட்சேபனை இல்லை. ஆனால், அதற்காக எங்கள் ஜில்லாவில் நிதி வசூலிக்கப்பட்டது. எந்த முறையில் வசூலிக்கப்பட்டது என்பது எல்லாம் எங்களுக்குத் தெரியும். வசூலிக்கப்பட்ட தொகை எவ்வளவு, எத்தனை பேர்களுக்குச் சிகிச்சை அளித்தார்கள் என்று பார்க்க வேண்டும். நடுவில் அந்த நிதி சேர்ந்துவிடக் கூடாது என்றுதான் சொல்லுகிறோம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நல்ல வேளை. கண்ணொளி வழங்குவதிலே ஆட்சேபனையில்லையென்று சொன்னதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நிதியைப்பற்றிச் சொல்லுகிறேன். இந்த 26 முகாம்களில் புற நோயாளிகளாக (Outpatient) சிகிச்சை பெற்றவர்கள்—கண்ணுக்குச் சிகிச்சை பெற்றவர்கள்—1,22,555 பேர். கண்ணை அறுவை செய்துகொண்டு சிகிச்சை பெற்றுக் கண்ணாடி வழங்கப்பெற்றவர்கள் 19,697 பேர். என்னுடைய பிறந்த




நாளை முன்னிட்டுக் கண்ணொளி வழங்க வேண்டுமென்று கேட்டு, யாரும் கட்டாயப்படுத்தப்பட்டு அல்ல, இன்றைக்கு, இதுவரையிலே, கிடைத்திருக்கிற நிதியினுடைய மொத்தத்

தொகை ரூ. 50 லட்சம். இது நிதியாகக் கிடைத்திருக்கிறது இந்த நல்ல காரியத்திற்கு. இதிலே, இந்த 2,19,697 பேருக்கு அறுவைச் சிகிச்சை செய்து கண்ணாடி வழங்கவும், 1,22,355 பேர்கள் கண் சிகிச்சைப் புற நோயாளிகளாகப் பாவிக்கப்பட்டுச் சிகிச்சை செய்யவும் இதுவரையிலே ரூ. 11 லட்சம் செலவிடப்பட்டிருக்கிறது. என்னுடைய பிறந்தநாள் அடிப்படையிலே சேர்க்கப்பட்ட நிதியென்ற காரணத்திஞல் அது என்னுடைய வரவு செலவுக் கணக்கிலே இல்லையென்பதையும், அது அரசாங்கத்தினுடைய வரவு செலவுக் கணக்கிலேதான் நடைபெறுகிறது என்பதையும் இந்த அவைக்கும் இந்த அவையின் மூலமாகப் பொது மக்களுக்கும் தெரிவித்துக் கொள்வது என்னுடைய கடமை யாகும்.

### சத்துணவுத் திட்டம்.

நம்முடைய மாநிலத்தில் மத்திய அரசினுடைய உதவி யோடு சத்துணவுத் திட்டம் நன்கு நிறைவேற்றப்படுகிறது என்பதை மத்திய அரசிலே இருப்பவர்களும் புகழ்ந்து கூறுகிஞர்கள். சென்னையிலும் மற்றும் 20 முக்கிய நகரங் களிலும் நம்முடைய நல் வாழ்வுத்துறை அமைச்சர், நம் முடைய சமூக நலப்பணியை ஏற்றிருக்கின்ற அரிசன நலத்துறை அமைச்சர் சத்தியவாணிமுத்து அம்மையார் ஆகியவர்களுடைய முயற்சியோடு, அந்த இலாகாவிலே இருக் கிற ஊழியர்களுடைய இடையருு உழைப்போடு, 6 வயதுக் குட்பட்ட குழந்தைகள், சத்துணவுத் திட்டத்தில் பயன் பெறும் குழந்தைகள் (2,10,000. தாய்மார்கள் 40,000 பேர்) முன்னேற்றக் கழக ஆட்சியில் இந்தத் திட்டம் செம்மையாக நடைபெறுகிறது என்று மத்திய அரசின் பாராட்டைப் பெற்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

1971-ஆம் ஆண்டு இளைஞர் அணி என்ற ஒன்று துவக்கப் பட்டது. அதிலே, இன்றைக்குப் படித்தும் வேலையில்லாம லிருக்கிற பட்டதாரிகள், பொறியாளர்கள், டாக்டர் பட்டம் பெற்றவர்கள் இவர்களெல்லாம், அவர்களுக்கு வேலை கிடைக்கிற வரையில், இடையிலே வேலைகள் கிடைத்தாலும் அவர்கள் அறிவித்துவிட்டுச் செல்லலாம் என்கின்ற நிபந்தனை யோடு, ஆண்கள் 2,729 பேரும், பெண்கள் 288 பேரும் அவர்களுடைய மாதாந்தரச் செலவுக்காக ரூ. 175 பெற்றுக் கொண்டு கிராமங்களில் முதியோர் கல்வி, சுற்றுப்புறத் தூய்மை, விஞ்ஞான அறிவு, உலகத்தைப்பற்றிய பொது அறிவு இவைகளையெல்லாம் கிராம மக்களுக்கு எடுத்துச் சொல்லுகிற அளவிலே பணியாற்றிக்கொண்டிருக்கிஞர்கள்.

இளைஞர் அணியைப் போலவே, பேரறிஞர் அண்ணு அவர் களால் உருவாக்கப்பட்ட சீரணியும் தமிழ் நாட்டிலே எல்லாக் கிராமங்களிலும், நகரங்களிலும் ஏராளமான நற் பணிகளைக் குவித்திருக்கிறது என்பதை நாடு நன்ருக அறியும்.

### அரிசனங்களின் அரசு

1967-ஆம் ஆண்டு தமிழ்நாட்டிலே உள்ள அரிசன மக்களுக்காக ஒதுக்கப்பட்ட, ஒதுக்கிய தொகை ரூ.3½ கோடி; 1972-ஆம் ஆண்டில் அரிசன மக்களுக்காக ஒதுக்கப் பட்ட, ஒதுக்கப்படுகிற தொகை ரூ. 8½ கோடி.) இந்த அரசு அரிசனங்களுக்காக என்ன செய்தது, அரிசன மக்கள் ஏமாற்றப்பட்டு விட்டார்கள் என்றெல்லாம் கேள்விக்கணை களை மேடையிலேயிருந்து அரசியல்வாதிகள் எங்களை நோக்கி விடுத்துக்கொண்டே இருக்கிறார்கள். ஒருவேளை, நான் பின் தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவன் என்கின்ற காரணத்தால் அரிசன சமுதாயத்தை மறந்து விட்டேன் என்கின்ற பழியை என் மீது போடவேண்டுமென்று எண்ணிப் பின்தங்கிய சமுதாயத்திற்குத்தான் நான் பாடுபடுகிறேன் என்கின்ற குற்றத்தைச் சாட்டுவதற்காக அந்தப் பெரியவர்கள் அர சியல் ரீதியில் தாக்க முற்பட்டிருக்கிறார்கள். அன்று நண்பர் பாலசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டபடி, இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் நான் சம்பந்தியாகிவிட்ட காரணத்தினால், யாரும் அந்த அவநம்பிக்கை கொண்டிடத் தேவையில்லையென்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ரூபாய் 3½ கோடி 1967-ஆம் ஆண்டு, அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை. இன்றைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை ரூ. 8½ கோடி. பிற்படுத்தப்பட்டவர்களுக்காக 1967-ஆம் ஆண்டிலே ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 1 கோடி. 1972-ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 4½ கோடி. இதுவரையிலே இல்லாத அளவுக்குத்—தமிழ் நாட்டினுடைய வரலாற்றிலே இல்லாத அளவுக்கு—அந்த இலாகா தனியாக அமைக்கப்பட்டு, பிற்பட்டவருக்காக ஒரு தனி அமைச்ச ருடைய நேரடிப் பார்வையில் அந்த இலாகா இயங்கி வரு கிறது. அண்மையிலேகூட, நானும் அந்தத் துறையினுடைய அமைச்சர் ராஜாராமும் சேலத்துக்குச் சென்று, பிற்படுத்தப் பட்டோர் பட்டியலில் புதியதாக இணைந்து இருக்கிற அகரவெள்ளாஞ் செட்டியார் சமுதாயத்தினுடைய பாராட்டு தலைப் பெற்றோம். பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக அமைக்கப்பட்ட பின்தங்கியோர் நலக் குழுவின் சிபாரிசின் அடிப்படையில் புதிதாகச் சேர்க்கப்பட்ட வகுப்பினர் ஏறத்தாழ 15 அல்லது 16. அர்ச்சகரை வேளாளர், கும்பர், கல்வேலி கவுண்டர், கன்னர், கன்னட சைனீகர், குர்சிடி கார், ஒவச்சர், பாணர், வெள்ளான் செட்டியார், வேடர், ஆஸ்தாந்திரகோலா, செட்டி, சக்கரவார், பணி செய்வார், சவனக்காரர் ஆகிய 15 வகுப்பினர் இன்றைக்குப் பின்தங்கி யோர் பட்டியலிலே புதிதாக இணைக்கப்பட்டிருக்கிறார்கள்.

1967-ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்காக இருந்த விடுதிகள் 11. இந்த 5 ஆண்டுக் காலத்திலே, பிற் படுத்தப்பட்ட மாணவர்களுக்காகக் கட்டப்பட்ட விடுதிகள்

134 ; 1967-ல் இன்றைக்குப் பிற்படுத்தப்பட்டவர்களுக்காக இருக்கிற விடுதிகளின் எண்ணிக்கை, அதையும் சேர்த்து 145.

## பெரிய புரட்சி

வேலைவாய்ப்பு, கல்லூரிகளிலே இடம் அளித்தல் போன்றவைகளில் அரிசன மக்களுக்கு 16 சத வீதம் என்று இருந்ததை 18 சதவீதம் என்று ஆக்கியதும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 25 சதவீதம் என்று இருந்ததை 31 சதவீதம் என்று ஆக்கியதும், சாதாரணமாகத் தெரியலாம். ஆனால் சமுதாயத்திலே அது எவ்வளவு பெரிய புரட்சி என்பது, இந்தச் சமுதாயத்தினுடைய கடந்த கால வரலாற்றை எண்ணிப் பார்க்கின்றவர்களுக்குத்தான் நன்றாகப் புரியும்.

அதுமட்டுமல்ல, அரிசனங்கள் அறங்காவலர்களாக இல்லாததையும், அவர்களை அறங்காவலர்களாகப் போடலாம், அல்லது போடவேண்டுமென்று பரிந்துரைஇருக்கிறது; போனால் போகட்டும் போடுங்கள்; என்கின்ற தயவு தாட்சண்யத்தின் அடிப்படையிலே இருந்தது முன்பு. அரிசனங்கள் அறங்காவலர்களாக ஆக்கப்பட வேண்டும்; அது சட்டமாகவே ஆக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு, எந்த ஓர் ஆலயத்திலே இருக்கிற அறங்காவலர் குழுவிலும் நிச்சயமாக ஒரு அரிசனச் சகோதரன் இடம் பெற்றே ஆக வேண்டுமென்ற சட்டத்தை அமைத்தது திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

அதைப்போலவே மேலும் ஒரு புரட்சித் திட்டமாக, அர்ச்சகர் என்றால் ஒரு வகுப்பிலே பிறந்தவர்களாகத்தான் இருக்கவேண்டுமென்ற நிலையைமாற்றி, ஆண்டவனை பூஜிக்க, அர்ச்சனை செய்யக்கூடிய தகுதி படைத்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் அர்ச்சகராக வரலாம் என்ற சாதிச் சனியனுடைய இடுப்பை ஒடித்த அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது.

## ஊழியர் அரசு

அரசாங்க அலுவலர்கள், அவர்களுடைய தேவைகள், கோரிக்கைகள் நிரந்தரமானவையானாலும் இந்த அரசாங்க அலுவலர்களுக்கு இரண்டாவது சம்பளக் குழு ஒன்றினை நிறுவி 21 கோடி ரூபாயை அள்ளி வழங்கியது திராவிட முன்னேற்றக் கழக அரசு. இதிலே மாறுபாடுகள் இருக்கிறது என்று அறிவித்ததும், ஒரு நபர் குழு ஒன்று அமைத்து, அந்தக் குழுவினுடைய சிபாரிசுகளை ஏற்று மீண்டும் ரூ. 5 கோடி அளித்தது முன்னேற்றக் கழக அரசு.

இதற்குப் பிறகு, அரசு அலுவலர்களுக்கு இடைக்கால நிவாரணமாக டி. ஏ.-யில் ரூ. 10 உயர்வு அளித்ததன் காரண மாக 6 கோடி ரூபாய் இழப்பையும் பொருட்படுத்தாமல் பொறுப்பேற்றுக் கொடுத்த அரசு முன்னேற்றக் கழக அரசு.

வெள்ளையன் காலத்திலிருந்து இருந்து வந்தது என். ஜி. ஓ.-க்களின் இரகசியக் குறிப்பேட்டு முறை; அதை யாராலும் அகற்ற முடியாது என்ற அளவுக்கு அதிகாரி களுடைய குறுக்கீடு இருந்ததை, என். ஜி. ஓ.-க்கள் எப்படி யும் தகர்த்தெறிய வேண்டுமென்று அவர்கள் நிறைவேற்றிய தீர்மானங்கள்—ஒரு காலத்திலே அண்ணா அவர்கள், அவர் களுக்களித்த வாக்குறுதி—அதற்கேற்பக் கடந்த ஆண்டு, இர கசியக் குறிப்பு முறையை, வெள்ளைக்காரன் காலத்திலிருந்து வந்த அந்த முறையை, 20 ஆண்டுக் கால காங்கிரஸ் ஆட்சி யிலும் அதை அகற்றுவதற்குத் துணியாத அந்த முறையை அகற்றி; அரசாங்க அலுவலர்களுடைய அன்பையும், ஆதர வையும் பெற்றது முன்னேற்றக் கழக அரசு என்பதை நாடு நன்கு அறியும்.

விவசாயிகளைப் பொறுத்த வரையில், 1966—67-ஆம் ஆண்டு—குறுகிய கால, மத்தியக் காலக் கடனுகை அளித்த தொகை ரூ. 31·45 கோடி—குறுகிய கால, மத்தியக் காலக் கடன், 1971—72-ல் அளித்த தொகை ரூ. 57·34 கோடி. நீண்ட காலக் கடன், அதாவது 10-லிருந்து 15 ஆண்டு காலக் கடன், 1966—67-ல் ரூ. 2·93 கோடி. 1971—72-ல் ரூ. 25·42 கோடி. நம்முடைய கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்ட அயராத முயற்சிகளால் விவசாயிகளுக்கு இந்த அளவுக்குக் கடன்களை நாம் வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

விவசாயிகளுடைய பேரன்பினை நாம் பெற்றிருக்கிறோம். இந்த அரசு விவசாயிகளுடைய அரசாக இன்றைக்கு இருக் கிறது. இடையிலே சில பேர் அதை மாற்றுவதற்கு முனைந் தாலும் விவசாயிகளுக்கு , விவசாயத் தொழிலாளருக்குப் பணியாற்றுவதற்காக இந்த அரசு இருக்கிறது என்பதற்கு இதைவிட ஆதாரம் தேவையில்லை என்பதைப் பார்க்கிறோம்.

அடுத்து, டாக்டர் நாவலர் அவர்கள் பொறுப்பேற்றிருக் கிற கல்வி இலாகா, 1966—67-ஆம் ஆண்டில் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் பொதுக் கல்விக்காகச் செலவழிக்கப் பட்டது 44 கோடி ரூபாய். இன்றைக்கு 1972—73-ஆம் ஆண்டின் பொதுக் கல்விக்காக ஒதுக்கியிருக்கிற தொகை 89 கோடியே 85 இலட்சம் ரூபாய். இதிலே மருத்துவக் கல்லூரி, அரிசனத் துறையினர் மூலம் இயங்குகிற பள்ளிகள் ஆகியவற்றையும் சேர்த்தால் 113 கோடி ரூபாய் ஆகிறது. மொத்தம் மாநிலத்தின் செலவு 396 கோடி ரூபாயில்

கல்விக்காக மூன்றில் ஒரு பங்கு செலவழிக்கிறோம்; 113 கோடி ரூபாய் ஒதுக்குகிறோம் என்பதை மறந்துவிடக்கூடாது, இதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். பின்னாலே இதற்கு வர இருக்கிறேன்.

1966—67-ஆம் ஆண்டு அரசுக் கல்லூரிகள், தனியார் கல்லூரிகள் 105 இருந்தன. 1972—73-ஆம் ஆண்டிலே 176 கல்லூரிகளாக அதிகரித்திருக்கின்றன. 1966—67-ஆம் ஆண்டில் இருந்த அரசுக் கல்லூரிகள் 27 ஆகும். ஆனால் இன்றைக்கு 1972—73-ஆம் ஆண்டில் 49 கல்லூரிகள் இருக்கின்றன. கழக ஆட்சியில் 5 ஆண்டுக் காலத்திலே புதிதாக வந்த கல்லூரிகள் 71 என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. துவக்கப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் தொகை 1966—67-ஆம் ஆண்டில் 50 லட்சமாக இருந்தது. 1971—72-ஆம் ஆண்டில் 57 லட்சமாக உயர்ந்து, கிட்டத்தட்ட 7 லட்சம் மாணவர்கள் தொகை அதிகரித்து இருக்கிறது. உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் தொகை 1966—67-ஆம் ஆண்டில் 13 லட்சத்து 4 ஆயிரமாக இருந்தது, 1971—72-ஆம் ஆண்டில் 15 லட்சத்து 38 ஆயிரமாக உயர்ந்து, ஏறத்தாழ 3½ லட்சம் அதிகமாக மாணவர்களுடைய தொகை உயர்ந்திருக்கிறது. கல்லூரி மாணவர்களின் எண்ணிக்கை 1966—67-ஆம் ஆண்டில் 94 ஆயிரம்




ஆகும். 1972—73-ஆம் ஆண்டில் இரண்டு லட்சம் மாணவர்கள், செலவு கல்லூரிக்கு மாத்திரம் 1966—67-ஆம் ஆண்டில் 2 கோடி ரூபாய் ஆக இருந்தது. இப்பொழுது கல்லூரிக்கு மாத்திரம் ஆகிற செலவு 10 கோடி ரூபாய்க்கு மேல் ஆகிறது. மாலை நேரக் கல்லூரிகள் 1966—67-ஆம் ஆண்டில் 3 இருந்தது. படித்த மாணவர்களின் எண்ணிக்கை 520. 1972—73-ஆம் ஆண்டில் 32 மாலை நேரக் கல்லூரிகள், படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை 9 ஆயிரம். 520-லிருந்து 9 ஆயிரமாக உயர்ந்திருக்கிறது. இது கல்வித் துறையிலே நாம் கண்டிருக்கிற வளர்ச்சி.

## குடிசை மாற்று வாரியம்

குடிசை மாற்று வாரியப் பணிகளை மற்ற மாநில அரசைச் சேர்ந்தவர்கள் வந்து பார்த்துத் தங்கள் மாநிலத்திலே இதை உருவாக்க வேண்டுமென்ற அளவுக்கு வழிகாட்டியாக அமைந் திருக்கிறது. இன்று நான் வருகிற வழியிலே அயோத்தியா குப்பத்தைப் பார்த்தேன். பீச் ரோட்டிலே குடிசைகள் எல்லாம் அகற்றப்பட்டு அந்த மக்கள் எல்லாம் தங்களுக்காகக் கட்டப்பட்ட கூடகோபுரங்களிலே இருப்பது—ஏதோ சேர சோழ—பாண்டிய மன்னர்கள் எல்லாம் இருந்த தாகச் சொல்கிறார்களே—அவர்கள் மீண்டும் வந்து ராஜ உடை அணிந்து கொண்டு கூடகோபுரங்களிலே உள்ள உப்பரிகையிலே வந்து பார்த்தால் அதைப் பார்க்கிற நேரத்திலே ஏற்படுகிற மகிழ்ச்சியைவிட அதிக மகிழ்ச்சி—குடிசையிலே அன்றைக்கு வாழ்ந்த மக்கள் இன்றைக்கு, கூட கோபுரத்திலே இருப்பதைப் பார்க்கிற நேரத்திலே நமக்கு ஏற்படுகிறது. நொச்சிக் குப்பத்தைப் பாருங்கள், அயோத்தியா குப்பத்தைப் பாருங்கள், கோட்டூர்புரத்திலே, வியாசர்பாடியிலே ஏழை மக்களுக்காக அமைக்கப்பட்டிருக் கின்ற எழில் மாளிகைகளைக் காணுங்கள். இதற்காக 7 ஆண்டுக்கான திட்டமொன்றை உருவாக்கி அதனை நிறை வேற்றிட, திரு இராம. அரங்கண்ணல் அவர்கள் தலைமையில் குடிசைமாற்று வாரியம் உருவாக்கப்பட்டு 63 திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்ற அளவில்—அந்தத் திட்டத் தின் கீழ் 23,232 குடியிருப்புகள் கட்டப்பட வேண்டுமென்ற முறையில்--அவற்றில் 4,590 கட்டி முடிக்கப்பட்டவை; வேலை நடந்துகொண்டு இருப்பவை, பாதியளவுக்கு நடந்துகொண் டிருப்பவை 7,997; ஆரம்ப வேலை தொடங்கப்பட்டு இருப்பவை 10,745. இந்தத் திட்டத்தைத் திரு ஜெயப் பிரகாச நாராயணன் பாராட்டியிருக்கிறார். இந்தத் திட்டத்தை எல்லைப்புற காந்தி பாராட்டியிருக்கிறார். பல் வேறு மாநிலங்களின் முதல்வர்கள் பாராட்டியிருக்கிறார்கள். வெளிநாட்டிலிருந்து வருகின்ற தூதுவர்கள் பாராட்டியிருக் கிறார்கள், நல்லவர்கள் அனைவரும் பாராட்டி இருக்கிறார்கள்.

**திரு ஆர். பொன்னப்ப நாடார்:** திருமதி இந்திரா காந்தி அம்மையார் அந்தத் திறப்பு விழாவிற்கு வர மறுத்து விட்டதாகச் செய்தி சொல்லுகிறார்களே, அது உண்மையா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மறுத்துவிட வில்லை. பல்வேறு நிகழ்ச்சிகளிருந்த காரணத்தினால் வர இயலவில்லை. நல்லது சொல்லும்பொழுது இதுதான் கண்ணிலே படும். ஏதாவது இப்படிப் பட்ட விஷயங்களைக் கேட்க வேண்டுமென்று தான் தோன்றுகிறது. அந்த ஒட்டுக் குடிசைகளில் வாழ்கின்ற மக்கள் அத்தனை பேரையும் நான் இந்திரா காந்தியாகப் பார்க்கிறேன். அந்த ஒட்டுக்

குடிசைகளில் வாழ்கின்ற தாய்மார்களை எல்லாம் நான் என்னுடைய தாயாகக் காண்கிறேன். அந்தக் குடிசைகளில் வாழ்கின்றவர்களையெல்லாம் என்னுடைய சகோதரர்களாகக் காண்கிறேன். ஏழை எளிய மக்களின் ஆட்சியிலே, சாதாரண மானவர்களின் ஆட்சியிலே, ஏழை எளிய மக்களுக்கு இதையாவது செய்ய முடிந்ததே என்ற நிம்மதியைக் காண கிறேன். ஆனால் திரு பொன்னப்ப நாடார் அவர்களுக்கு, குடிசை மாற்று வாரியத் திறப்பு விழாவுக்கு யார் வந்தார்கள் என்பதுதான் குறை. நான் அரங்கண்ணல் அவர்கள் சார்பிலே தெரிவித்துக் கொள்கிறேன். திரு பொன்னப்ப நாடார் அவர்கள் அடுத்த நிகழ்ச்சியிலே வந்து கலந்து கொண்டு அந்த மக்களைப் பார்க்க வேண்டும். டாக்டர் ஹண்டே அவர்களுடைய தொகுதியிலே வேலை நடந்து கொண்டிருக்கிறது. டாக்டர் ஹாண்டே அவர்கள் வெளியிலே வேகமாகப் பேசக் கூடியவர்கள். அவர் உட்கார்ந்திருக்கின்றபொழுது ஹண்டேதான்; எழுந்தால் தான் சண்டே.

அதைப்போலவே கிராமப்புறங்களிலே இருக்கின்ற மக்கள் இதற்கு முன்பெல்லாம் அதிகாரிகளை மக்கள் வந்து சந்திக்க வேண்டிய கட்டாயம் இருந்தது. ஆனால் அதைப் பெருமளவுக்குக் குறைத்திருக்கிறோம். முழுவதுமாக இல்லை யென்றாலும் பெருமளவுக்குக் குறைத்து இருக்கிறோம். 1967-ஆம் ஆண்டில் மனுநீதித் திட்டம் என்ற திட்டத்தினை




இராமநாதபுரம் மாவட்டத்திலே தொடங்கி இன்றைக்குத் தமிழகம் முழுவதும்பரவலாக நடத்திக் கொண்டு வருகிறோம். திங்கள்தோறும் வாரமொரு நாள் குறிப்பிட்டு மாவட்ட அதிகாரிகள் அனைவரும் கிராமங்களுக்குச் செல்கிறார்கள். ஒரு நாளிலே கிட்டத்தட்ட 1,500 கிராமங்களுக்கு அதிகாரிகள் சென்று மக்களைச் சந்தித்து அவர்களுடைய மனுக்களைப் பெற்று உடனடியாகக் கோரிக்கைகளைத் தீர்த்து வைக்கிறார்கள். இந்த மனுநீதித் திட்டம் இந்த ஆட்சியிலே உருவாக்கப்பட்டுச் செம்மையாக நடைபெற்று வருகிறது. கிராமப்புறத்திலும், நகர்ப்புறத்திலும் இருக்கின்ற சாதாரணக் குடிமகனுக்கு உதவிடப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல் திட்டம் உருவாக்கப்பட்டு இருக்கின்ற நகராட்சிகளின் மொத்த எண்ணிக்கை 99 ஆகும். திரு கந்தப்பன் அவர்கள் தலைமையில் இந்த அரசினுடைய ஒத்துழைப்போடு அந்தத் திட்டத்தைச் செவ்வனே நடத்தி வருகிறோம், தீவிரமாகப் பல்வேறு பணிகளை ஆற்றி வருகிறோம். மொத்தம் உள்ள நகராட்சிகள் 93-ல் ஏற்கெனவே வெள்ளையன் காலத்திலிருந்து 1967-ஆம் ஆண்டு வரையில் 30, 35 நகராட்சிகள் தான் தண்ணீர் வசதியைப் பெற்றிருந்தன—ஆனால் இன்று மொத்த நகராட்சிகள் 99-ல் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டிருப்பது 80 என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆலந்தூர், பல்லாவரம், ஆம்பூர், வாணியம்பாடி, பண்ணுருட்டி, ஆத்தூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, அருப்புக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய பத்து இடங்களில் இன்றைக்கு இந்தப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆய்வு வேலை நடந்து வருபவை, அம்பத்தூர், கத்திவாக்கம், மாதவரம் ஆகிய இடங்களாகும். ''அவுட் லைன் புரப்போஸ்'' லுக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள இடங்கள் நெல்லிக்குப்பம், பொன்மலை, சிங்காநல்லூர் ஆகியவை ஆகும். ஆய்வு மதிப்பீட்டுத் தொகையை, நிதிவசதி இல்லாததால் நகராட்சி செலுத்த முன்வராத இடங்கள், சீர்காழி, கொளச்சல், பத்மனாபபுரம் ஆகியவை ஆகும்.

இவைகள் மட்டுமல்லாமல், மொத்தம் இருக்கின்ற பேரூராட்சிகள் 641. இவற்றில் இதுவரையில் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டவை 55. குடிநீர்த் திட்ட வேலைகள் நடந்துகொண்டிருப்பவை 27. ஆய்வு அனுமதிக்கப்பட்டவை 145. மிச்சம் 414. இதற்காக ஒரு தீவிரமான திட்டத்தை யோசித்துக் கொண்டிருக்கிறோம். விரைவில் தமிழகத்தில் 7 ஆண்டுக் காலத்திற்குள்ளாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லாத கிராமம், பட்டி தொட்டி எதுவுமே இல்லை என்கின்ற உன்னதமான நிலையை நாம் நிறைவேற்றியே தீருவோம். அந்தச் சபதத்தை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். வீராணம் திட்டம் 1974-ஆம்

ஆண்டு இறுதியில் முடியக்கூடும் என்ற நல்ல செய்தியை நான் சென்னை நகரத்து மக்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நூற்பாலைகளைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் மாதவன் அவர்கள் விளக்கமாகச் சொன்னார்கள். நமது மாநிலத்தில் 14 நூற்பாலைகள்— (Sick mills) அவைகளை ஏற்று நடத்துவது என்று அரசு தீர்மானித்தது. கீழ்க் கண்ட மில்களை இதுவரையில் எடுத்திருக்கிறோம். ஓம் பராசக்தி, முருகன், சோமசுந்தரா, கோவை ஸ்பின்னிங் அண்ட் வீவிங், கிருஷ்ணவேணி, ரெங்கவிலாஸ், கம்போடியா மில்ஸ், ஒரு மாதத்திற்குமுன் எடுத்தவை;



பங்கஜா, காளிஸ்வரா, சாரதா, பயொனீர், சுதந்திரா (மதுரை), பாலராமவர்மா ஆகிய மில்களை ஒரு மாதத்திற்குள் எடுத்திருக்கிறோம். எடுக்கப்பட்ட 13 மில்களில் 9 மில்களில் உற்பத்தி துவங்கி விட்டது. 4 மில்களில் விரைவில் வேலை துவங்கும். ஓர் ஆலை மட்டும், காளீஸ்வரா மில், அதன் உரிமையாளர்கள் நீதிமன்றத்தில், தம்முடைய மில் சிக் மில் அல்ல என்று வழக்குப் போட்டிருக்கிறார்கள்.

மேற்படி மில்களை நடத்துவதற்கு நிதி உதவியை மாநில அரசு 49 சதவிகிதமும், மத்திய அரசு 51 சதவிகிதமும் தருவதற்கு முடிவு எடுக்கப்பட்டுள்ளது. மாநில அரசு எவ்வளவு கஷ்டங்கள் இதற்காக எடுத்துக் கொண்டது, எந்த அளவிற்கு வாதாடியது, போராடியது என்பதை அறிவீர்கள். 13 மில்களுக்கும் ஒதுக்கப்பட்ட நிதி:

மத்திய அரசு 164 லட்சத்து 83 ஆயிரம். தமிழ்நாடு அரசு 144 லட்சத்து 66 ஆயிரம். இதுவரை மத்திய உதவி கிடைத்திருப்பது 92 லட்சம் ரூபாய். மாநில அரசு கொடுத்திருப்பது 117 லட்சம் ரூபாய். பயன் பெறும் தொழிலாளர்கள் 13 மில்களிலும் சேர்ந்து 11,900 பேர் என்பதையும் பெருமையோடு தெரிவித்துக் கொள் கிறேன்.

இந்தியாவிலே எந்த மாநிலமாவது ஆலைகள் மூடப் பட்டு, அதனால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு, வேலையிழந்து வேதனையிலே சிக்கித் தவிக்கின்ற தொழி லாளர்களுக்கு, பாட்டாளிகளுக்கு, நிவாரணத் தொகை அளித்ததாகக் கேட்டிருக்கிறோமா? இங்கே தான், கோவையிலே மில் மூடப்பட்டதால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு, முதலமைச்சர் நிதியிலிருந்து முதலில் 5 இலட்சம் ரூபாயும், ஆக மொத்தம் சுமார் 6 இலட்சம் ரூபாய் முதலளவில் முதலமைச்சர் நிதியிலிருந்து நிவார ரணம் கொடுத்த ஒரே மாநிலம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி நடத்துகின்ற நம்முடைய தமிழக மாநிலம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

## வேலை வாய்ப்பு

வேலைவாய்ப்புத் திட்டங்களைப் பற்றியெல்லாம் பொன் னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள். நம்முடைய சக்தி அத்தனையையும் பயன்படுத்தி நம்மால் முடிந்த வரையில் வேலைவாய்ப்புத் திட்டங்களை மாநில அரசின் அதிகார வரம்பு, நிதிநிலை ஆதாரம் இவைகளுக்கு ஏற்றவாறு நாம் வகுத்திருக்கிறோம். நான் முதலில் கூறிய படி இளைஞர் அணி மூலம் 3,000 பேர்களுக்கு வாய்ப்பு அளிக்க இருக்கிறது. பயிற்சி ஆசிரியர்கள் 6,500 பேர்களுக்கு வாய்ப்பு. கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் மத்திய அரசின் உதவியோடு 15,000 பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுத்திருக்கிறோம். பொறியாளர்களுக்கு வேலைவாய்ப்புத் தந்து 600 பட்ட தாரிகள், 1,000 டிப்ளமா ஹோல்டர்ஸ், 1000 கிராப்ட்ஸ்மென் இரண்டாண்டுப் பயிற்சி பெறுவார்கள்; அவர்கள் பயிற்சி முடிந்த பிறகு அந்தந்தத் துறையிலே சேர்க்கப்படுவார்கள் என்ற உறுதி அளிக்கப்பட்டிருக் கிறது.

தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்றவர் களுக்குக் கடன் கொடுக்கும் திட்டம், 3,000 பேர்களுக்குக் கடன் கொடுக்கும் திட்டம் இன்றைக்குத் தயாரிக்கப் பட்டிருக்கின்றது.

கிராமப்புறச் சிறப்பு வேலைத்திட்டத்தின் மூலம், 15,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு.

குளங்கள், ஏரிகள் இவைகளைச் சீர்திருத்த, மேம் படுத்த, ஆய்வு செய்வதற்காக 418 பொறியாளர்கள், 607 டிப்ளமாதாரர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

என்ஜினீயரிங் பட்டதாரிகள் 20,000 ரூபாய்க்குக் குறைவான வேலைகள் காண்ட்ராக்ட் எடுத்தால் 5 சத விகிதம் வரை அதிகப்படுத்திக் கொடுக்கலாம் என்று ஆணையிடப்பட்டுள்ளது.

முதல் கிரேட் காண்ஸ்டபிள்கள் 1,000 பேர் தேர்ந் தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

105 டாக்டர்களுக்குப் புதிய பதவிகள் ஏற்படுத்தப் பட்டன. 205 நர்சுகளுக்குப் புதிய பதவிகள் ஏற்படுத்தப் பட்டன.

இவை வேலைவாய்ப்புத் திட்டத்தில் நம்மால் முடிந்த வரையில் செய்த சாதனைகளாகும்.

## பட்டா

தமிழ்நாடு முழுவதும் தாங்கள் குடியிருக்கும் இடம் தங்களுக்குச் சொந்தமாக்கப்படாமல் இருக்கிறதே என்று கவலைப்பட்ட மக்கள் இலட்சக் கணக்கில் இருந்தார்கள். பெருந்தலைவர் காமராசர் அவர்கள் கூடச் சொல்லி யிருக்கிறார் ; ''பட்டா வழங்குகிறேன், பட்டா வழங்கு கிறேன் என்று சொல்கிறார்கள், இது என்ன பெரிய விவகாரம், ஏற்கெனவே குடியிருந்த இடத்தைத்தானே கொடுத்திருக்கிறார்கள்'' என்று சொல்கிறார். ஆனால் உண்மை என்ன என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஏற்கெனவே குடியிருந்த இடம் தான். ஆனால் அந்த இடத்தைப் பிரித்துப் பழுது பார்க்கும் உரிமை கூட அவர்களுக்கு இல்லை. அந்த இடத்தின் கூரையை அகற்றி விட்டு, ஓட்டு வில்லை வீடாக மாற்றியமைக்கின்ற உரிமை அவர்களுக்கு இல்லை. அந்த வீட்டைப் பத்தாண்டுகளுக்குப் பிறகு விற்கவோ அடைமானம் செய்வதற்கோ உரிமையில்லை. அந்த உரிமை இல்லாமல், எந்த நேரத்திலே வெளியேறு என்று சொன்னாலும் வெளியேற வேண்டிய துர்ப்பாக்கியமான நிலையிலிருந்தவர்கள் ; காலையிலே திருப்பூர் மொய்தீன் அவர்கள் கூறியதைப் போல், வெளியேறு என்றால் வெளி யேற வேண்டியவர்கள் ; விரட்டப்படக் கூடிய அளவில், அடிமைகளைப் போல் இருந்தவர்கள்; அப்படிப்பட்டவர்

களுக்கு 1947-ஆம் ஆண்டு முதல் 1967-ஆம் ஆண்டு வரையில், இருபதாண்டுக்காலத்தில் கொடுக்கப்பட்ட நிலப்பட்டா எவ்வளவு? 1,11,443 பட்டாக்கள் இருபதாண்டுக்காலத்தில். ஆனால் இந்த ஐந்தாண்டுக் காலத்தில், எதிர்க் கட்சிகளின் நம்பிக்கையைப் பெற முடியாமல் இருக்கும் முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில், ஐந்தாண்டுக் காலத்தில் 2,72,235 பேர்களுக்கு நிலப் பட்டா, அதைப் போலவே மனைப்பட்டா. இருபதாண்டுக் காலத்தில் 63,770 பேர்களுக்கு, இருபதாண்டுக்காலக் காங்கிரஸ் ஆட்சியில் அளிக்கப்பட்டது. ஆனால் ஐந்தாண்டுக் காலக் கழக ஆட்சியில் 3,52,013 பேர்களுக்கு நாம் பட்டாக்களை வழங்கியுள்ளோம்.




தஞ்சை மாவட்டத்திற்கு என்று தனிச்சட்டம் இயற்றினோம். திரு மணலி கந்தசாமி அவர்கள், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களிலே ஒருவர். அவர்கள் தஞ்சையிலே நடைபெற்ற குடியிருப்பு மனைகளைச் சொந்தமாக்கும் விழாவில் பேசும்போது சொன்னார்கள். தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இரவு 12 மணிக்கு இந்தப் பட்டாக்களை வாங்கிக் கொண்டு சென்று, இன்று இரவு தூங்கும்போது நம்முடைய சொந்த வீட்டிலே தூங்குகிறோம் என்ற உணர்ச்சியோடு தூங்குவார்கள் என்று பெரியவர் கந்தசாமி அவர்கள் கூறினார்கள். இன்னொன்றும் சொன்னார்கள், இரத்தப் புரட்சியால் சாதிக்கக்கூடிய காரியத்தைக் கழக அரசு ஒரு துளி மை செலவிலே சாதித்து விட்டது என்று சொன்னார்கள். 1,54,274—பேர்களுக்குத் தஞ்சை மாவட்டத்தில் விவசாயத் தொழிலாளர்களுக்கு, அதிலேயும் பெரும்பாலும் அரிசன மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், அவர்களுக்குக் குடி

யிருப்பு மனைகள் சொந்தமாக்கப்பட்டன. ஆரம்பத்திலே கூட, அதற்கு ஒரு தொகை செலுத்த வேண்டும், அதைக் கடனாக அரசு கொடுக்கும், அரசுக்குத் திரும்பச் செலுத்த வேண்டும் என்று சட்ட மன்றத்திலே நாம் ஒரு முடிவை எடுத்தோம். ஆனால் அந்த முடிவு மாற்றப்பட்டு— இன்றைக்கு அவர்கள் தொகை எதுவும் செலுத்த வேண்டியதில்லை. அந்த மனைக்கு எவ்வளவு பணம் தேவையோ அதை மிராசுதாரர்களுக்கு அரசாங்கமே கொடுத்து விடும் என்ற முடிவையும் அரசு எடுத்திருக்கிறது. இவைகளெல்லாம் ஏழை எளிய, நடுத்தர மக்களுக்காகச் செய்யப்பட்ட காரியங்கள்.

## பேருந்து தேசியமயம்

சோஷலிசம், கம்யூனிசம் பேசுகிறார்கள். ஆனால் எந்த சோஷலிசத் திட்டத்தைத் திராவிட முன்னேற்றக் கழக அரசு புறக்கணித்து விட்டது? பேருந்துகள் தேசிய மயமாக்கப்பட வேண்டும் என்று இந்த அரசு அமைந்த வுடனேயே இங்கே பஸ்களைத் தேசிய மயமாக்க முதல் கட்டமாக 75 மைல்களுக்கு அப்பாலுள்ள வழித் தடங்கள், சென்னையிலிருந்தே புறப்படும்—வந்து சேரும் வழித்தடங்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர் கோவிலில் வந்து சேரும்—புறப்படும் வழித்தடங்கள் இவைகள் தேசிய மயமாக்கப்பட்டன.

பிறகு 10 பஸ்களுக்கு மேல் யாரும் வைத்துக் கொள்ளக் கூடாது என்ற உச்சவரம்பு கொண்டு வரப்பட்டது. அதைத் தொடர்ந்து, 50 பஸ்களுக்கு மேல் இருந்த கம்பெனிகள் தேசிய மயமாக்கப்பட்டன. மேலும் எல்லாப் பஸ்களும் படிப்படியாகத் தேசிய மயமாக்கப்பட வேண்டு மென்று, ஆக்கப்படும் என்ற அறிவிப்பை விடுதலை நாள் வெள்ளி விழாச் சிறப்புக் கூட்டத்தில் இந்த அவை யிலே அறிவித்தேன். அதற்கான விதிமுறைகளைப் போக்கு வரத்துத்துறை அமைச்சர் நண்பர் இராமச்சந்திரன் அவர் கள் சட்ட அமைச்சரோடு வகுத்துக் கொண்டிருக் கிறார்கள். ஆகவே பேருந்து முதலாளிகளுக்கு ஏற்பட்ட கோபத்தைப்பற்றி இங்கே பேசியவர்கள், குறிப்பாக ஏ. ஆர். பெருமாள் போன்றவர்கள் சொன்னார்கள்.

யாருடைய கோபத்தைப் பற்றியும் நான் கவலைப்படப் போவதில்லை. இருப்பது இரண்டு நாள்தான் என்றாலும், ஆட்சிச் சக்கரம் இன்னும் ஒரு நாள் தான் என்றாலும், சமதர்ம சமுதாயத்தைச் சமைக்க, ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்க, திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்ற நடவடிக்கைகளை எடுத்தே தீரும் என்பதை மாத்திரம் இந்த மன்றத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

## சங்கு

சங்கு எடுக்கின்ற தொழிலாளர்கள் கோரிக்கை இருப தாண்டுக் காலக் கோரிக்கை. ''இராமநாதபுரத்தில் ஏலத் திற்கு விடுகிறார்கள். யாரோ சில பெருமக்கள் ஏலம் எடுத்து லாபம் சம்பாதிக்கிறார்கள். ஆகவே, சங்கு எடுக்கின்ற தொழிலாளர்களாகிய நாங்களே அதை எடுத்து விற்பனை செய்யும் உரிமை எங்களுக்கு வேண் டும்'' என்று கேட்டார்கள். பழைய ஆட்சியில் அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. சென்ற ஆண்டுக்கு முன் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அந்தக் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு—சங்கு எடுக் கும் தொழிலாளர்கள் சங்கை எடுத்து அவர்களே விற்பனை செய்யும் உரிமையும் அளிக்கப்பட்டிருக்கிறது. முஸ்லீம்லீக் கட்சியைச் சேர்ந்தவர்களும், ஏன் கம்யூ னிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சட்ட மன்ற உறுப்பினர்களும், தோழமைக் கட்சியைச் சேர்ந்தவர்களும் எடுத்துச் சொன்ன அடிப்படையில் இன்றைக்கு அந்த உரிமை தொழிலாளர்களுக்கே வழங்கப்பட்டு விட்டது. கிட்டத் தட்ட இரண்டாயிரம் தொழிலாளர்கள் அதன் பயனை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

## விபத்தில் இறந்தால்

**1969**-ஆம் ஆண்டு நான் முதலமைச்சராகப் பொறுப் பேற்றுக் கொண்டபோது இரண்டு விஷயங்களை வெளி யிட்டேன். மரமேறுபவர்களுக்கு விபத்து ஏற்பட்டால், மீனவர்களுக்கு விபத்து ஏற்பட்டால், அவர்களுடைய குடும்பங்களுக்கு ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும் என்று சொன்னேன். ஓராயிரம், இரண் டாயிரம் எல்லாம் என்ன பெரிய விவகாரமா என்றெல்லாம் பேசுகிறார்கள். நடந்திருப்பது என்ன? ஆயிரம்ரூபாய் உதவி பெற்ற குடும்பங்கள்—இரண்டு மூன்று ஆண்டுக் காலத்தில் **73** குடும்பங்கள். **73** குடும்பங்களில் மரம் ஏறியவர்கள் விபத்தின் அடிப்படையில் இறந்துவிட்ட காரணத்தால் அந்த **73** குடும்பங்களுக்கு ஆயிரம் ரூபாய் வீதம் அளிக்கப் பட்டிருக்கிறது. விபத்தில் கைகால் முறிந்தவர்களுக்கு **500** ரூபாய் உதவித் தொகை என்று அறிவிக்கப்பட்டிருக் கிறது. அந்த வகையில் **81** பேர் அந்த உதவித் தொகையைப் பெற்றிருக்கிறார்கள்.

மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கச் செல்லும்போது மரணம் அடைந்தால் ஆயிரம் ரூபாய் தரப்படும் என்று அறிவித்தேன். இதுவரையில் கடந்த இரண்டு மூன்று ஆண்டுக் காலத்தில் **105** குடும்பங்களுக்கு இந்த உதவித்




தொகை வழங்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 1,08,000 ரூபாய் இந்தக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அறிவிக்கும்போது சாதாரணமாகத் தெரிந்த விஷயம் இன்றைக்கு 105 குடும்பங்களின் கண்ணீரைத் துடைக்கும் அளவுக்குப் பயன்பட்டிருக்கிறது.

## விடுதலை வீரர்

விடுதலை வீரர்களுக்குக் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில், தீர்மான வடிவில், மானியம் வழங்க வேண்டுமென்று சொல்லப்பட்டு அந்தத் தீர்மானம் நிறைவேறி ஒரு ஐந்து பேருக்கு மானியம் வழங்கப்பட்டது. அதற்குப் பிறகு ஆட்சி மாறிவிட்டது. மாறாமல் இருந்திருந்தால் காங்கிரஸ் ஆட்சி தொடர்ந்து அதைச் செய்திருக்கும்; மறுக்கவில்லை. ஆனால் அண்ணா ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகும், அண்ணாவுக்குப் பிறகு நாங்கள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்ற பிறகும் ஐந்து பேராக இருந்த அந்த விடுதலை வீரர்களின் எண்ணிக்கை 50 ரூபாய் மானியம் பெறுகிற வீரர்களின் எண்ணிக்கை—இன்றைக்கு 7,448 ஆக உயர்ந்திருக்கிறது. இப்போது அந்த 50 ரூபாய் 75 ரூபாயாக உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

தாமிரப் பத்திரம் பெறும் விடுதலை வீரர்கள் சிலபேர் டில்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். அவர்களை எல்லாம் வழி அனுப்பி வைத்த ஒரே ஒரு முதலமைச்சர் இந்தியாவிலேயே நான்தான் என்று கருதுகிறேன். நானும் நாவலரும் வேறு சில அமைச்சர்களும் புகைவண்டி நிலையத்திற்குச் சென்று தாமிரப் பத்திரம் பெற டில்லிக்குச் சென்ற விடுதலை வீரர்களை, தியாகிகளை வழி அனுப்பி வைத்தோம். கதராடைகள் அணிவித்துக் களிப்புற்றோம்.

டில்லிக்குச் சென்று திரும்பி வந்த பிறகு சொன்னார்கள்—டில்லியில் கேட்டார்களாம் 'இங்கு எங்கள் மாநிலத்

தில் தருவதைப்போல் உங்களுக்கு மானியம் தருகிறார்களா?' என்று கேட்டார்களாம். அவர்கள் எல்லாம் 'அப்படி என்றால் என்ன?' என்று கேட்டார்களாம். இது வேறு மாநிலங்களில் விடுதலை வீரர்களுக்குக் காட்டப்படுகின்ற உபசாரமாக இருக்கிறது.

7,400 பேருக்கு நாங்கள் மானியம் அளித்தது மாத்திரமல்ல; கட்டபொம்மன் பரம்பரை, வாரிசு எங்கே இருக்கிறது என்று தேடிக் கண்டுபிடித்து அவர்களுக்கு மாதாந்தர உதவித்தொகை அளிக்கிறோம். வ.உ.சி. குடும்பத்தில் கூட, மகள் ஆனந்தவல்லி அம்மையாரைத் தூத்துக்குடியில் பார்த்தேன். இப்போது அவர்களுக்கு மாதாந்தர உதவித் தொகை அளிக்கப்பட்டு வருகிறது.

## தியாகத்தை மதித்து

தில்லையாடி வள்ளியம்மையை மறக்காமல், தில்லையாடியில் பிறந்து வளர்ந்து தென்னாப்பிரிக்காவில் உயிர் நீத்த நாகப்பனை மறக்காமல், நாராயணசாமியை மறக்காமல், வள்ளியம்மை நகரை உருவாக்கி, மண்டபத்தைக் கட்டி, அரிசன மக்களுக்காக நாகப்பன் நகர், நாராயணசாமி நகர் என்று உருவாக்கி, தில்லையாடி கிராமத்தில் 10 லட்சம் ரூபாயை இந்த அரசு தில்லையாடி வள்ளியம்மை நினைவாகச் செலவழித்திருக்கிறது.

விஸ்வநாததாஸ் பற்றி முடிதிருத்துவோர் மாநாட்டில் கேட்டுக் கொண்டார்கள். ''கொக்குப் பறக்குதடி பாப்பா! வெள்ளைக் கொக்கு பறக்குதடி பாப்பா'' என்று தேசிய மேடைகளில் முழங்கிய நடிகராகஇருந்தாலும், போராட்டங்களில் இருந்து விதிவிலக்குப் பெறாமல் பல போராட்டங்களில் சிறை சென்று கஷ்ட நஷ்டங்களை ஏற்றுச் சிறைச்சாலையில் வாடிய செம்மல் விஸ்வநாததாஸ் அவர்களின் குடும்பத்தைத் தேடிப்பிடித்து ஓய்வூதியம் அளித்து வருகிறோம்.

அது மாத்திரமல்ல; இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தீக்குளித்து இறந்துபோன 9 வீரர்களின் குடும்பத்திற்கு 100 ரூபாய் மாத உதவித் தொகை கொடுத்து வருகிறோம். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது பல வகையிலும் உயிர் நீத்த, 1965-ஆம் ஆண்டுத் துப்பாக்கிப்பிரயோகத்தின் போது உயிர் நீத்த 53 பேரின் குடும்பங்களுக்கு இரண்டாயிரம் ரூபாய் வீதம் அளித்து வருகிறோம். அப்போது இருந்த அரசு அவர்களுக்கு எவ்விதமான உதவியும் செய்யவில்லை. இப்போது துப்பாக்கிப் பிரயோகம் நடந்தால் உடனே உதவித் தொகை கேட்கிறார்கள், நீதி விசாரணை கேட்கிறார்கள். ராஜினாமாச் செய் என்றெல்லாம் கேட்கிறார்கள். ஆனால் 1965-ல் துப்பாக்கிப் பிரயோகத்தால் இறந்த 53

பேர்களின் குடும்பங்களுக்கு, ஒரு குடும்பத்திற்கு இரண்டாயிரம் ரூபாய் வீதம் உதவித் தொகையாக அளிக்க இந்த அரசு முடிவு செய்து, அளிக்கப்பட்டிருக்கிறது.

**திரு ஆர். பொன்னப்ப நாடார் :** திருவிதாங்கூர் தமிழகப் போராட்டத்திலே பலரும் துப்பாக்கிப் பிரயோகத்திலே இறந்திருக்கிறார்கள். பலர் அடக்கு முறைக்கு ஆளாகியிருக்கிறார்கள். அவர்களுக்கு உதவி செய்ய அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பழைய அரசு செய்ய மறந்ததை எல்லாம் இந்த அரசு நிச்சயமாகச் செய்யும். திரு நாடார் அவர்கள் அதுபற்றிக் குறிப்பிட்டு விவரங்களைத் தருவார்களேயானால் நிச்சயமாகப் பரிசீலித்து ஆவன செய்யப்படும்.

இவை மாத்திரமல்லாமல் தமிழகத்தில் மத்திய மாநில உறவு பற்றி ஆராய, குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டு, அதனுடைய அறிக்கையையும் பெற்றிருக்கிறோம்.

இரண்டாவது சம்பளக்குழு ஏற்படுத்தப்பட்டு, ஊதிய உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது. போலீஸ் கமிஷன் நியமிக்கப்பட்டு, ஏராளமான சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. மாநிலத்திற்கென்று தனியாகத் திட்டக் குழு ஏற்படுத்தப்பட்டது. நிர்வாகச் சீர்திருத்தக்குழு ஏற்படுத்தப்பட்டு, அறிக்கை தரப்பட்டு, அவற்றை அரசு பரிசீலித்து வருகிறது. நெசவாளர்களின் பிரச்சினைகளைப் பற்றி ஆராய்ந்து பரிந்துரை செய்யத் தனியாக ஒரு குழு, திரு. சந்தானம் தலைமையில் அமைக்கப்பட்டிருக்கிறது. கைத்தறி நெசவுத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளம் பற்றி ஆராயத் தனியாகக் குழு பணியாற்றி வருகிறது. பிற்பட்டோர் நலக்குழு ஏற்படுத்தப்பட்டு, அறிக்கை பெறப்பட்டுப் பரிந்துரைகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விவசாயத் தொழிலாளர்களுக்கு மாநிலம் முழுவதும் கூலி நிர்ணயம் செய்ய விரைவில் ஒரு குழு அமைய இருக்கிறது.

## திருப்பணி

வெளியில் சிலபேர் பத்திரிகை ஆசிரியர்களைப் பார்த்துக் கேட்டார்களாம். திராவிட முன்னேற்றக்கழக அரசைப் பற்றிக் குறை கூறுவதையே தொழிலாக வைத்துக்கொண்டிருக்கிறீர்களே, ஏன் ? என்று கேட்டார்களாம். அதற்கு அவர்கள் சொன்னார்களாம்—'' அவர்களுக்குக் கோயில் பிடிப்பதில்லை, ஆண்டவனைப் பிடிப்பதில்லை, நாஸ்திகர்களாக இருக்கிறார்கள், ஆகவேதான் எதிர்க்கிறோம் ''

என்று சொன்னார்களாம். ஹாண்டே அவர்களுக்கே, இவ்வளவு நாள் எங்களோடு பழகியும், அண்ணா அவர்களோடு உறவாடிக்கொண்டிருந்த ஹாண்டே அவர்களுக்கே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ''ஒன்றே குலம், ஒருவனே தேவன்'' என்ற கொள்கை இதுநாள் வரை புரியாமல் இருக்கும் போது—பத்திரிகை ஆசிரியர்களுக்கு ஒரு வேளை புரியாமல் இருக்கலாம், அல்லது புரிந்தும் மாறாமல் இருக்கலாம். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, இந்த அரசைப் பற்றி . . . .

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** கொள்கை என்றார்கள், என்னுடைய கொள்கை அதுதான். பலதடவை சொல்லியிருக்கிறேன். இப்போது அல்ல. Even from my student days, I have been saying it The late Anna also knew it. என்னுடைய கொள்கையைப் பின்பற்றுவதில் ரொம்பச் சந்தோஷம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நம் இரண்டு பேரையும் விட வயதில் மூத்தவர் அண்ணா. அவர் சொன்ன கொள்கையை இருவரும் பின்பற்றுவோம். 1967-ல் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு கோவில்களை எல்லாம் இடித்துவிட வில்லை. பழுதடைந்த கோவில்களில் திருப்பணி செய்யப்பட்டது. இப்படித் திருப்பணி செய்யப் பட்ட கோயில்கள் 1967-ல் 200. பெரியாருக்குப் பிடிக்காது. ஹாண்டேக்குப் பிடிக்கும். தமிழ் நாட்டின் பழைய கலை, கலாச்சாரம், சிற்பங்கள் இவைகள் எல்லாம் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற அக்கறையோடு 1967-ல் திருப்பணி செய்யப்பட்ட கோயில்களின் எண்ணிக்கை 200; 1968-ல் 90, 1969-ல் 130; 1970-ல் 250; 1971-ல் 450; 1972-ல் 700 திருப்பணிகள் நடைபெற்றிருக்கின்றன. கோயில்களின் திருமண மண்டபங்கள் 1947-ல் இருந்து 1967 வரையில் 34 தான் கட்டப்பட்டன. நண்பர் கண்ணப்பன் அவர்களின் முயற்சியினால் 1967-72-ல் இந்த ஐந்தாண்டுகளில் 135 திருமண மண்டபங்கள் கட்ட அனுமதிக்கப்பட்டு, அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அடுத்த ஆண்டு 78 திருமண மண்டபங்கள் கட்டப்படும் என்று இரண்டு நாட்களுக்கு முன்னர் இந்த மன்றத்தில் கேள்வி ஒன்றுக்குப் பதிலாக அளிக்கப்பட்டிருக்கிறது. பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது, அரங்கண்ணல் பேசியதாக ஓர் உறுப்பினர் இங்குக் குறிப்பிட்டதாகக் கேள்விப்பட்டேன். நீங்கள் ராஜினாமாச் செய்துவிட்டு வள்ளுவர் கோயிலுக்குப் போய் உட்கார்ந்து அதைச் சரி செய்யக்கூடாதா என்று கேட்டதாக ! அவர்கள் அதைச் செய்யாவிட்டாலும், இன்று வள்ளுவர் கோயில் திருப்பணியை ஏற்றுக் கொண்டு, அதில் பக்தவத்சலம் அவர்களையும் ஓர் உறுப்

பினராக இருக்க வேண்டுமென்று வேண்டி, அவர்களும் ஒப்புதல் அளித்து, அவர்களும், நமது கண்ணப்பன் அவர்களும், திரு அரங்கண்ணல் அவர்களும், குன்றக்குடி அடிகளாரும், திருமதி அனந்தநாயகி அவர்களும், மற்றும் பலரும் சேர்ந்து ஒரு குழு அமைக்கப்பட்டுத் திருவள்ளுவர் கோவிலை நல்ல முறையில் அமைத்து அதை நம்முடைய பழந் தமிழ் இலக்கியத்திற்குச் சான்ருக அமைக்க வேண்டும் ; பல லட்சம் ரூபாய் செலவானுலும் பரவாயில்லை என்ற அளவில் அந்தப் பணிக்கான முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

## பூம்புகார்

கடற்கரைப்பட்டினமாக ஒரு காலத்தில் பேரோடும் புகழோடும் விளங்கிய பூம்புகார்ப் பட்டினத்தில், கண்ணகியின் மாண்பினைச் சீரும்சிறப்பும் மிக்க இலக்கியச் செறிவை எடுத்துக் காட்டுகின்ற வகையில், காலத்திற்கும் அக்கடற் கரையில் கண்ணகியின் காவியம் கீதமிசைத்துக் கொண் டிருக்க வேண்டும் என்ற தணியாத ஆசையோடு சிலப்பதி காரக் கலைக்கூடம் அமைத்து வருகிறேம். வேலைகள் முடிவுற் றுச் சட்டசபை உறுப்பினர்கள் அனைவரும் அதைப் பார்த்து மகிழலாம். விரைவில் அந்த வாய்ப்புக் கிடைக்கும்.

இவ்வளவு சாதனைகளை, உணர்ச்சி பூர்வமான, உள்ளத்தைத் தொடக்கூடிய ஏழ்மையில் உழன்று கொண்டிருக்கிற மக்களைக் கை தூக்கிவிடக்கூடிய இவ் வளவு சாதனைகளையும் ஆற்றியிருக்கிற இந்த அரசை நடத்துகிற நாங்கள் ஜனநாயகத்தை உணராதவர்கள்' ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைப்பவர்கள் என்று —நேற்றுக் கூட முன்னுள் சபாநாயகர் வெகு அழகான வார்த்தைகளை எல்லாம் மிக முக்கியமானதொரு இடத்தில், மூதறிஞர் ராஜாஜி அவர்கள் பிறந்த தின விழாவில், மூதறிஞர் ராஜாஜி அவர்கள் கூட ஏற்றுக்கொள்ள முடியாத வார்த்தைகளை எல்லாம் அந்த விழாவில் பேசியிருக்கிருர்கள். '' பொய்யன் கருணாநிதியின் செவிட்டு சர்க்கார் '' என்று முன்னுள் சபாநாயகர் பேசியிருக்கிருர். வேறு சிலரும் நம்முடைய ஜனநாயகத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் இன்று கடைப் பிடித்து வருகின்ற ஜனநாயகத்தை இழித்தும், பழித்தும் பேசுகிருர்கள். இந்த அவைக் கூட்டங்கள் கூட்டப்படுவதிலிருந்து, அமைச்சரவைக் கூட்டங்கள் நடத்துவது வரை, எந்த அளவிற்கு ஜன நாயகம் கடைப்பிடிக்கப்படுகிறது என்பதைப் புள்ளி விவரங்களோடு சமர்ப்பிக்கிறேன். 1952-லிருந்து 1957 வரையில் ஐந்து ஆண்டுகளில் ஒன்பது கூட்டங்கள் (செஷன்ஸ்) நடைபெற்றிருக்கிறன. நடைபெற்ற நாட்கள் ஐந்து ஆண்டுகளில் 314. 1957-62 வரையில் 10

செஷன்ஸ். கூடிய நாட்கள் 305. 1962-67 வரையில் 9 செஷன்ஸ். கூடிய நாட்கள் 252. 1967-72 இதுவரையில் 15 செஷன்ஸ் கூடிய நாட்கள் 317. ஆகவே ஜனநாயகக் கடமைகளை நிறைவேற்றிட எவ்வளவு அதிகமான நாட்களைத் தரவேண்டுமோ அதைத் தந்து, இந்தச் சட்டசபைக் கூட்டங்களை நடத்த வேண்டுமோ அந்த அளவிற்கு நடத்தியிருக்கிறோம்.

### சர்வாதிகாரி ?

அமைச்சரவைக் கூட்டங்களை எடுத்துக்கொண்டால்—சிலர் பேசுகிறார்கள்—எந்த அமைச்சருடைய பைல்களையும் அவர்கள் பார்க்க முடியாதாம். எல்லாவற்றையும் முதலமைச்சர் தான் பார்க்கிறாராம். அமைச்சர்களுடைய சுதந்தரம் எல்லாம் பறிக்கப்பட்டு விட்டனவாம். முதலமைச்சர் அவர்கள் சர்வாதிகாரியாக நடந்து கொள்கிறார் என்று பேசுகிறார்கள். சில பைல்கள் முதல் அமைச்சருக்கு வரவேண்டும். சில பைல்களை அந்தந்தத் துறை அமைச்சர்களே பார்த்து முடிவு செய்யலாம். நான் நிதி அமைச்சராக இருக்கின்ற காரணத்தால் பல பைல்கள் எனக்கு வந்தாக வேண்டும். ஆட்சிப் பொறுப்பில் இல்லாமல் இருந்தவர்களுக்கு இது தெரியாமலிருக்கலாம். ஆனால் ஆட்சிப் பொறுப்பிலிருந்து பணியாற்றியவர்களுக்குக் கூட இது தெரியாமலிருப்பதற்காக உள்ளபடியே வேதனைப்படுகிறேன். யாரையும குறை கூற இதைச் சொல்லவில்லை. அமைச்சரவைக் கூட்டங்களை எடுத்துக் கொண்டால், மற்றவைகளை விடக் குறைந்த அளவில் இல்லை. யாரையும் கலக்காமல் எதுவும் நடைபெறவில்லை என்பதற்காகச் சான்றுகள் ஒன்றிரண்டைச் சொல்ல விரும்புகிறேன். 54 முதல் 63 வரையில் ஒன்பதரை ஆண்டுக் காலம் மதிப்பிற்குரிய தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். அவர்கள் கூட்டிய அமைச்சரவைக் கூட்டங்கள் 61. திரு பக்தவச்சலம் அவர்கள் கூட்டிய கூட்டங்கள் (1963—67 வரையில் 3 ஆண்டுகள் 5 மாதங்கள் முதலமைச்சராக இருந்தார்கள்) 15. அண்ணா அவர்கள் 6—3—1967-லிருந்து 2—2—1969 வரையில் ஒரு ஆண்டு பதினோரு மாதம்; இதில் பதினோரு மாதங்களைக் கழித்து விடலாம். ஓர் ஆண்டுக்காலம் அவர்கள் கூட்டிய கூட்டங்களின் எண்ணிக்கை 8. நான், 10—2—1969 முதல் இதுவரையில் மூன்று ஆண்டுகள் பத்துமாதம் நடத்திய அமைச்சரவைக் கூட்டங்கள் 47 என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அமைச்சரவைக் கூட்டங்கள் மட்டுமல்ல ; எந்த ஒரு சிக்கலான பிரச்சினையாக இருந்தாலும், சர்ச்சைக்குரிய பிரச்சினைகளாக இருந்தாலும் அமைச்சர்களைக் கலந்து கொண்டு, இன்னும் சொல்லப் போனால் சில நேரங்களில் பொதுப் பிரச்சினைகளில், காவிரி

நீர்த் தகராறு போன்ற பிரச்சினைகளில், எதிர்க் கட்சித் தலைவர்களையும் கலந்து கொண்டு முடிவு எடுக்கின்ற ஜனநாயகப் பண்பினை நாம் காத்து வருகிறோம். ஆகவே சர்வாதிகாரம் நடைபெற்றுவிடவில்லை.

### அடக்குமுறை

திரு பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள்; காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் பேசினார்கள், ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். இங்கு போலீஸ் ராஜ்யம் நடைபெறுகிறது; அடக்குமுறை நடைபெறுகிறது; சுட்டுத் தள்ளுகிறோம் என்றெல்லாம் சொன்னார்கள். துப்பாக்கிப் பிரயோகத்தை நாம் மகிழ்ச்சியோடு வரவேற்கிறோம் என்று பொருள் அல்ல. தவிர்க்க முடியாத சூழ்நிலையில் சில துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்றுவிடுகின்றன. சிலர் உயிர் பறிக்கப்பட்டு விடுகிறது. அதற்காக வருந்துகிறோம். அனுதாபம் தெரிவிக்கிறோம். அந்தக் குடும்பங்களுக்கு நிதி வழங்குகிறோம். அதனால் அந்தக் குடும்பங்கள் முழு ஆறுதல் பெற்றுவிட முடியாது. அது எங்களுக்குத் தெரியாமல் இல்லை. ஆனால் தமிழ்நாட்டில் நடைபெறுகிற துப்பாக்கிப் பிரயோகத்தை வைத்துக் கொண்டு உடனடியாக இந்த அமைச்சரவை ராஜினமா செய்ய வேண்டும் என்று சொல்கிற நேரத்தில்—ஒரு நான்காண்டுக்கால அகிலஇந்தியக் கணக்கைப் பார்க்க வேண்டும். குஜராத் மாநிலத்தில் '69, '70, '71, '72 இந்த நான்காண்டுகளில் நடைபெற்ற கலகம் 183; செத்தவர்கள் 53 பேர்கள்; காயம் பட்டவர்கள் 257 பேர். மராட்டியத்தில் நான்காண்டுக் காலத்தில் நடைபெற்ற கலகம் 394; இறந்தவர்கள் 129; காயம் அடைந்தவர்கள் 426,—துப்பாக்கிச்சூட்டினால்! கேரளாவில் கலகம் 21; இறந்தவர்கள் 14; காயம் பட்டவர்கள் 165. மேற்கு வங்கத்தில் கலகம் 1011; இறந்தவர்கள் 335; காயம் பட்டவர்கள் 511. ஆந்திராவில் கலகம் 310; இறந்தவர்கள் 213; காயம் பட்டவர்கள் 223. தமிழ்நாட்டில் கலகம் 23; இறந்தவர்கள் 30; காயம் பட்டவர்கள் 203. இந்தப் புள்ளிவிவரத்தோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். தமிழ்நாட்டில் 30 பேர்கள் தான் இறந்தவர்கள் என்று சொல்வதால் 30 பேர்களைச் சுட்டது சரிதான் என்று வாதிப்பவர்கள் அல்ல நாங்கள். 30 பேர்களில் 17 பேர்கள் விவசாயப் போராட்டத்தில் இறந்த நேரத்தில்—தமிழ் நாட்டில் இதுவரையில் யாருக்கும் கொடுக்காத அளவுக்கு ரூ. 5,000 அந்தக் குடும்பங்களுக்கு வழங்கினோம். ரூ. 5,000 உயிரின் விலை அல்ல. ஆனால் இழந்துவிட்ட குடும்பங்களுக்கு . . . .

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** முதல் அமைச்சர் அவர்களின் ஸ்டேட்மென்டில் கலகங்கள் 23 என்று சொல்லியிருக்கிறார்

கள். கலவரங்கள் குறைவாக உள்ளன. மற்ற மாநிலங்களை விட இது நல்ல அமைதியாக இருக்கின்ற மாநிலம். முல்கி பிரச்சினை போன்ற பிரச்சினைகள் இங்கு இல்லை. அமைதியாக இருக்கக்கூடிய இடத்தில், பிரச்சினைகளே இல்லாத மா நிலத்தில், கிளைவ் ஹாஸ்டல் போன்ற இடங்களில் போலீஸ் காரர்கள் சென்று ஆர்ப்பாட்டம் செய்யக்கூடிய முறை தவிர்க்கப்பட வேண்டுமென்று சொன்னேனே தவிர, வேறு அல்ல. முன்கூட்டியே எச்சரிக்கை கொடுத்து, சிறிய விஷயங்கள் பெரிய கலகமாக பயங்கரமான நிலைமைகள் ஏற்படாமல் இருக்க வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்படிக் கேட்பதினாலே எங்களுக்கு எந்தக் குறையும் இல்லை. இதைக் கேட்டுவிட்டு ராஜினாமாச் செய்யுங்கள் என்று சொல்கிற நேரத்தில் தான் இந்தப் புள்ளி விவரங்களைக் கூற வேண்டியிருக்கிறது.

**மாணவர்கள்**

கிளைவ் ஹாஸ்டல் சம்பவம் நான் வரவேற்றதல்ல. பாளையங்கோட்டைச் சம்பவத்தை எவ்வளவு வன்மையாகக் கண்டித்து இருக்கிறேன். நீங்கள் யாரும் அறியாதவர்கள் அல்ல. ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இதற்கு முன்பு நடைபெற்ற கலவரங்களின்போது, நாங்கள், டாக்டர் ஹாண்டே உள்பட ; எத்தனை தடவை கேட்டிருக் கிறோம்—நீதி விசாரணை வேண்டுமென்று. 1965-ல் மொழிக் கிளர்ச்சி தமிழகம் பூராவிலும் நடந்த நேரத்தில், சிதம்பரம் ஒரு ஊரில் தவிர, வேறு எந்த ஊரிலும் நீதி விசாரணை வைக்கப்படவில்லை. 1958-ல் முதுகுளத்தூரில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தபோது, எதிர்த் தரப்பு வரிசையில் இருந்த அத்தனைபேரும் கேட்டோம், நீதி விசாரணை வேண்டுமென்று. அன்றைக்கு முதலமைச்சராக இருந்த காமராஜரும், அமைச்சர் சுப்பிரமணியமும் அதை ஒப்புக் கொள்ளவில்லை. அதோடு எடுத்ததற்கெல்லாம் நீதி விசாரணை வைத்தால் போலீசார் கலவரம் நடந்த இடத்திற்குப் போக மாட்டார் கள். ஆகவே, நீதி விசாரணை வைக்க முடியாது என்று சொல்லி விட்டார்கள்.

பாளையங்கோட்டைச் சம்பவம் பற்றிக் குறிப்பிட்டபோது ஒன்று எனக்கு ஞாபகத்திற்கு வந்தது. மேலவையில் சங்கரலிங்கம் எடுத்துச் சொன்னார்கள். பொன்னப்ப நாடார் அவர்களும், சங்கரலிங்கம் அவர்களும் சட்டமன்ற உறுப்பின ராக இருந்த போது—1965-ஆம் ஆண்டில்—தூத்தூர் என்ற இடத்தில் ஒரு பள்ளிக்கூடத்தில் ஒரு போலீஸ் சப்-இன்ஸ் பெக்டர் நுழைந்து தன்னை இழி மொழி கூறிய மாணவனைத் தன் வசம் ஒப்படைக்க வேண்டுமென்று கேட்ட நேரத்தில்,

அங்கிருந்த மூன்று ஆசிரியர்கள் அனுப்ப முடியாது என்று கூறியதால், அந்த சப்-இன்ஸ்பெக்டர் அந்த மூன்று ஆசிரியர் களையும் கைது செய்து, கையில் விலங்கிட்டு இழுத்துச் சென்று அவர்களைச் சிறைச்சாலையில் அடைத்துவிட்டார். பொன்னப்ப நாடார் அவர்களும் சங்கரலிங்கம் அவர் களும் அதைப்பார்த்து விட்டு, பக்தவத்சலத்திடம் கேட்ட நேரத்தில்-அவர்கள் முறைப்படி நடவடிக்கை எடுக்க மறுத்து இருக்கிறார்கள். அப்போதும் மாணவர்கள் கிளர்ச்சி நடை பெற்றது. ஆனால் அதை நாடு தழுவிய இயக்கமாக மாற்று வதுதான் நல்லதல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன். நாம் எல்லா விதமான நடவடிக்கைகளையும் எடுத்து இருக் கிறோம். பேராசிரியர் சீனிவாசனை அடித்த இன்ஸ்பெக்டர்-போலீஸ்காரர்கள் மீது வழக்குப் பதிவு செய்து இருக்கிறோம். மாணவர்களின் போராட்டத்தினால் இன்ஸ்பெக்டர் அவர் களுக்கும், பேராசிரியருக்கும் தகராறு. அந்த இன்ஸ் பெக்டர் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டு இருக் கிறார். லூர்துநாதன் தண்ணீரில் விழுந்து இறந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்த, மாவட்ட நீதிபதித் தகுதியில் ஒருவர் நீதிவிசாரணைக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார். இவ்வளவு நடைபெற்று இருக்கிறது.

திருச்சியில் நடந்த சம்பவம் குறித்து எனக்கு வந்த தகவல்களைக் கூறினேன். இன்னும் தகவல்களைச் சேகரியுங் கள் என்று ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். நான் நிராகரித்தேனா ; புறக்கணித்தேனா ? நீங்கள் யார் சொல்ல, நான் யார் கேட்க ? என்று சொன்னேனா ; பல பேர் தகவல் கள் கூறினார்கள். அமைச்சர் மாதவன் மூலமாக பிரின்சி பாலுடன் தொடர்பு கொண்டு சில விவரங்களைத் தந்தேன். நீதி விசாரணை வைக்கப்பட்டிருக்கிறது. நீதி விசாரணை வைக்கப்பட்ட பிறகும் இன்று அர்த்தால் நடத்தப்பட்டிருப் பதாக அறிகிறேன். அமைதியாக நடைபெற்று இருக்கிறது.

நேற்று இங்கே ஒரு அறிக்கை, காங்கிரஸ் மாணவர்களால் அல்ல, சுதந்தரா மாணவர்களால் அல்ல, கம்யூனிஸ்ட் மாண வர்களும், அ. தி. மு. க. மாணவர்களும் சேர்ந்து வேலை நிறுத்தம் செய்வோம் என்று சொன்னார்கள். எல்லாக் கல்லூரிகளிலும் அல்ல. சட்டக்கல்லூரியில் நடைபெற்று இருக் கிறது. சட்டக்கல்லூரி மாணவர்கள் 5—6 பேர் பிற்பகலில் குறளகத்தின் உள்ளே சென்று இருக்கிறார்கள். இங்கே எதற்காக வருகிறீர்கள் என்று கேட்டபோது, அங்கே யிருக்கும் கேண்டீனில் நாங்கள் காப்பி சாப்பிடப் போகிறோம் என்று சொல்லி உள்ளே நுழைந்து, அங்கே மாட்டப்பட் டிருக்கும் முதலமைச்சர் படம்—என்னுடைய படத்தை உடைத்து நொறுக்கிப்போட்டுவிட்டுப் போய் விட்டார்கள். நான் கேட்கிறேன். நாம் மாணவர்களுக்காகப் பரிந்து பேச வேண்டியது தான். மாணவர்கள் மென்மையாக நடத்தப்

பட வேண்டியவர்கள் தான். அதற்காக இதே மாதிரியான காரியங்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே போனால், மாணவர்கள் என்ற ஒரே ஒரு தலைப்பின் கீழ் வருகிற காரணத்தால் எல்லா வன்முறைகளையும் நாம் அனுமதித்துக் கொண்டே போனால் நாடு எங்கே போய் நிற்கும்? அதைத் தயவுசெய்து அனைவரும் சிந்திக்க வேண்டும்.

என்னுடைய படம் உடைக்கப்பட்டதற்காக நான் கவலைப் படவில்லை. ஆயிரம் படத்தை உடைக்கட்டும் கவலையில்லை. என்னுடைய படத்தின்மீது சாணத்தை வீசியிருக்கிறார்கள். அதற்காக நான் கவலைப்படவில்லை. என்னுடைய படத்தின் மீது சாணத்தை வீசிவிட்டுக் கையை அசிங்கப்படுத்திக் கொள்கிறார்களே என்று தான் கவலைப்படுகிறேன். கையையும் கருத்தையும் அசிங்கப்படுத்திக் கொள்கிறார்களே; எதிர் காலத்தைப் பாழாக்கிக் கொள்கிறார்களே என்று கவலை தானே தவிர வேறு அல்ல. சட்டக் கல்லூரி மாணவர்கள் அர்த்தாலில் ஈடுபட்டால், வேலை நிறுத்தத்தில் ஈடு பட்டால், அமைதியாக ஊர்வலம் செல்ல வேண்டும். அப்படி யில்லாமல், குறளகத்தில் நுழைவானேன்? அங்கேயிருக்கும் படத்தை உடைப்பானேன்? யாராவது தடுத்தால் குறளகத்தில் போலீசார் நுழைந்து அடித்தார்கள் என்று செய்தி வரும். நாளைக்கு ஒத்தி வைப்புத் தீர்மானம் வரும். பத்திரிகைகளில் செய்தி வேறு பெரியதாகப் போட்டாலும் போடலாம். மாணவர்கள் கிளர்ச்சியில் ஈடுபடுவதால் அவர்களின் எதிர் காலம் பாழடிக்கப்படுகிறதே என்று தான் கவலைப்படுகிறேன்.

மாணவர்கள் கிளர்ச்சி, தமிழ்நாட்டில் மட்டும் நடப்பதாக யாரும் எண்ணிக்கொள்ளக்கூடாது. உலகம் முழுவதும் நடைபெறுகிறது. இங்கேயும் நடைபெறுகிறது. இந்தியா வில் பல்வேறு மாநிலங்களில் இந்தக் கிளர்ச்சி நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. டெல்லி பல்கலைக் கழகத்தில்மாண வர்கள் கிளர்ச்சி—துணைவேந்தர் தாக்கப்பட்டார். பல்கலைக் கழக அலுவலகத்தை மாணவர்கள் கைப்பற்றிக்கொண்டார் கள். காவலர் தலையிட்டார்கள். ஒரு மாத காலமாக அந்தப் பல்கலைக்கழகம் மூடிக்கிடக்கும் நிலைமை. பஸ்கள் தீயிடப் பட்டன. ஆகிய சம்பவங்கள் நடைபெற்று இருக்கின்றன. கௌகத்தி பல்கலைக்கழகம், அஸ்ஸாம் மாநிலத்தில் இருக் கிறது. இந்த மாநிலத்தில் மொழிக்கிளர்ச்சி, பள்ளிகள் கல்லூரிகள் மூடப்பட்டன, எங்கும் வன்முறைச் செயல்கள் பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு முழுவதும் கலவரச் சூழ்நிலை. இப்படி, மாணவர்களைப்பற்றிய செய்திகள் வராமல் இல்லை. ஆந்திரப் பிரதேசத்தில், டாக்டர் ஹாண்டே அவர் கள் குறிப்பிட்டது போல், முல்கி விதிகளைக் குறித்து, ஆந்திரா, தெலிங்கானா பகுதிகளில் மாணவர்கள் வன்முறைக் கிளர்ச்சி, கல்வி நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டுக் கிடக்கின்றன. அரசுச் சொத்துக்களுக்கும், பொதுச் சொத்துக்

களுக்கும் அதிகமாக, சேதம் ஏற்பட்டிருக்கிறது. உத்திரப் பிரதேசத்தில் 40 நாட்களாகப் பல்கலைக்கழகங்கள் கல்வி நிலையங்கள் மூடப்பட்டிருக்கின்றன. வன்முறைக்கிளர்ச்சி கள், நடைபெற்று இருக்கின்றன. காவலர் கல்வி நிலையங்களைப் பாதுகாத்து வருகின்றனர். பஞ்சாப்-அரியாணு மாநிலங் களில் சினிமா டிக்கட்டின் கட்டணம் குறைக்கப்பட வேண்டுமென்று மாணவர்கள் தொடுத்த கிளர்ச்சியின் காரணமாகக் கல்வித் துறையும், பொதுவாழ்க்கையும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று செய்தி வந் திருக்கின்றது. துப்பாக்கிச் சூட்டில் பல பேர் சாவு, காயமுற்றோர் பலர், இன்றும் அங்கே அமைதி நிலைமை ஏற் படவில்லை. இங்கே மத்திய போலீஸ் அழைக்கப்பட்டதற்கே குறை கூறிய பொன்னப்ப நாடார் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன் அங்கே ராணுவமே வரவழைக்கப்பட்டிருக்கிறது. 7 வாரத்திற்கும் மேலாகக் கல்வி நிலையங்கள் மூடிக் கிடக் கின்றன. குஜராத்தில் மாணவர்கள் கிளர்ச்சி. துணை வேந்தரை ராஜிநாமா செய்ய வேண்டுமென்று வற்புறுத்தி கிறார்கள். அந்தக் கிளர்ச்சியின் சூடு தாங்காமல் துணை வேந்தரே உண்ணுவிரதம் இருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தடியடி, கண்ணீர்ப்புகை, துப்பாக்கிச் சூடு, சாவு, பல்கலைக் கழகங்களில் அடிக்கடி தகராறு, பல நாட்களாக மூடப் பட்டுக் கிடக்கின்ற நிலைமை. வங்காளத்தில் சென்ற இரண்டு மூன்று ஆண்டு காலமாகவே வன்முறைச் செயல்களின் காரணமாகப் பல்கலைக்கழகங்கள் பாதிக்கப்பட்டுக் கிடக் கின்றன. இது அனைவரும் அறிந்த ஒன்று. கேரளத்தில் தனியார் துறைக் கல்லூரி நிருவாகத்தினருக்கும் அரசுக்கும் ஏற்பட்ட தகராறின் காரணமாகப் பல கல்லூரிகள் இரண்டு திங்களுக்குமேல் மூடிக்கிடக்கின்றன. அதனை ஒட்டிக் கிளர்ச்சிகள் உருவாகியதை நாம் யாரும் மறந்து விடவில்லை.

இந்த நம்பிக்கை கோருகின்ற தீர்மானத்தில் பேசியவர் களும், எல்லாக் கட்சிகளும் ஒரு கருத்தை ஏற்றுக்கொள் வார்கள் என்று நினைக்கிறேன். மாணவர்கள் பொதுக் கோரிக்கைகளுக்காக, ஒரு மொழியால் தாங்கள் பாதிக்கப் படுகிறார்கள்; அல்லது பயிற்சி மொழித் திட்டத்தால் அவர் களுக்குச் சங்கடங்கள் இருக்கின்றன ; அவர்களுடைய உணவு விடுதியில் இத்தகைய கஷ்டங்கள் ; கல்லூரியில் வசதியில்லை என்பன போன்ற கோரிக்கைகளை வைத்துப் பேச்சுவார்த்தை மூலமாக, அமைதியான கிளர்ச்சியின் மூலமாகத் தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவேண்டுமேயல்லாது-எடுத்ததற்கெல்லாம் கிளர்ச்சி, போராட்டங்கள், யாரோ ஒருவரை ஒரு கட்சியில் இருந்து விலக்கினுல் அதற்குப் போராட்டம், அதற்காகக் கல் எறிதல், சர்க்கார் உடைமைகளுக்கும் சேதம் என்ற காரியங்களில் மாணவர்கள் ஈடுபடுவது உள்ளபடியே தமிழ் நாட்டின் எதிர் காலத்திற்கும், மாணவர்களுடைய எதிர்

காலத்திற்கும் உகந்தது அல்ல. மாணவர்கள், எடுத்ததற்கெல்லாம் போராட்டத்தில் ஈடுபடுவோம், வன்முறைகளில் ஈடுபடுவோம் என்று சொன்னால் அதை யாரும் வரவேற்க மாட்டார்கள், திரு. ஹாண்டே அவர்களும் அதைத்தான் வலியுறுத்திப் பேசினார்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் அதை வரவேற்கத் தயங்கமாட்டார்கள் என்று நம்புகிறேன். இந்த அவையின் சார்பாக மாணவர்களைக் கேட்டுக் கொள்வேன். அவர்களுடைய எதிர் காலத்தை மறந்து விடக்கூடாது! ஒளிமயமான எதிர்காலத்தை இந்த இளமைத் துடிப்பின் குறும்புகளால், இப்படிப்பட்ட கிளர்ச்சியால், அவர்கள் கெடுத்துக் கொள்வது நல்லது அல்ல என்பதை மீண்டும் மீண்டும் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

## குற்றச்சாட்டுகள்

குற்றச்சாட்டுகளைப்பற்றி எல்லாம் இங்கே எடுத்துப் பேசப்பட்டன. நம்பிக்கை இல்லை இந்த அரசின் மீது, ராஜினமாச் செய்ய வேண்டும் இந்த அரசு என்று பேசிய பொன்னப்ப நாடார் அவர்களும், திரு. ஜேம்ஸ் அவர்களும், டாக்டர் ஹாண்டே அவர்களும் குற்றச்சாட்டுக்களையெல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஒரு வகையில் எங்களுக்கு நிம்மதி. பிரதமரிடத்திலிருந்து நாங்கள் அனுமதி பெறுவதற்கு முன்பே மர்மப் பேழையில் முக்கால் பகுதி திறக்கப்பட்டுவிட்டது. ஆனால், டெல்லி வரை குற்றச்சாட்டுகளைக் கொண்டு போனவர்கள் நல்ல சாமர்த்தியசாலிகள். அவர்கள் தாங்கள் வந்து இங்கே ஆழம் பார்ப்பானேன் என்று பொன்னப்ப நாடார் அவர்களையும், ஜேம்ஸ் அவர்களையும் விட்டு ஆழம் பார்த்து விட்டார்கள் (டாக்டர் ஹாண்டே எழுந்திருந்தார்) நீங்கள் இல்லை. அவ்வளவு சாமர்த்தியமாக அவர்கள் அந்தக் காரியங்களைச் செய்திருக்கிறார்கள். சட்டசபையில் பேச மாட்டார்களாம். பொது மக்களிடத்தில் சொல்ல மாட்டார்களாம். சட்ட மன்றத்தில் பேசுங்கள், நல்ல பாதுகாப்பு உண்டு. சட்ட மன்றத்தில் எதையும் பேசலாம், அந்தப் பாதுகாப்பு இங்கே அளிக்கப்பட்டிருக்கிறது. பதில் சொல்கிற கடமை எங்களுக்கு இருக்கிறது. ஆனால், இங்கே பேச வருவதில்லை. பொது மக்களிடத்திலே பேசுங்கள், பத்திரிகைகளிலே வரட்டும், நீங்கள் எதிர்பார்க்கின்ற நீதி விசாரணை, உயர்நீதி மன்றத்தில் நாம் நடத்திக் கொள்ளலாம் என்று சொல்கிறோம். பேராசிரியர் அன்பழகன் நேற்றோ அதற்கு முன்தினமோ குறிப்பிட்டார்கள். அவதூறு கூறுகிறவர்கள் தப்பித்துக் கொள்வது, குற்றம் சாட்டப்பட்டவர்கள் மாத்திரம் விசாரணைக்கு உட்படுவது என்பது சரியான நியாயமாகாது என்று குறிப்பிட்டார்கள். அவதூறு கூறுபவர்களுக்கு என்ன தண்டனை? ஆகவே தான் நீதி மன்றத்தில் சந்திப்போம். தைரியம் இருந்தால்,

துணிவு இருந்தால், பல்லாயிரக்கணக்கான மக்கள் மன்றத்தில் கூறுங்கள். கருணாநிதி என்ன குற்றம் செய்தார்? நெடுஞ்செழியன் என்ன குற்றம் செய்தார்? நடராசன் என்ன குற்றம் செய்தார்? சத்தியவாணி முத்து என்ன குற்றம் செய்தார்? என்று தைரியம் இருந்தால், துணிவு இருந்தால், திராணி இருந்தால், தெம்பு இருந்தால், வக்கு, வகை இருந்தால் பொது மக்கள் முன்னால் கூறட்டும், நீதி மன்றத்தில் சந்திப்போம் என்று கூறினோம். அங்கும் கூற முடியாதாம். சட்டமன்றத்தில் கூறுங்கள், பவ்யமாகப் பேசுவோம். இங்கே பாதுகாப்பு உண்டு; நான் பாதுகாப்பு என்று சொல்வது ஏதோ வன்முறையிலிருந்து பாதுகாப்பு என்று கருதிக் கொள்ள வேண்டாம். சட்டமன்றத்தில் சில உரிமைகள் இங்கே அளிக்கப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட பாதுகாப்பு. அந்த வளையத்திற்குள் நின்று பேசுகின்ற உரிமை, ஜனநாயகக் கடமை இருக்கிறது—இங்கே பேசுங்கள் என்று கூறினோம். இங்கேயும் பேசமாட்டோம், அங்கேயும் பேசமாட்டோம். மர்மம் மர்ம யோகியின் மர்மப் பேழையில் இருக்கிறது. ஆகவே, மர்மப் பேழையின் உள்ளே இருப்பதை விசாரணை வைத்துத் தான் ஆராயவேண்டும் என்று சொன்னால், இதைவிட வேடிக்கை, வேதனை என்ன இருக்க முடியும்?

நடப்பது கொள்கைப்போரா? கொள்கைப் போராட்டமா? கம்யூனிஸ்டு கட்சி அல்லது வேறு சில கட்சிகள்—தி. மு. க. 50 பஸ் விடுகிறவர்களைத்தான், அவைகளைத்தான் எடுத்துக் கொண்டு தேசிய மயமாக்கி இருக்கிறது, அது போதாது. உடனே எல்லா பஸ்களையும் தேசிய மயமாக்க வேண்டும் என்று வாதிட்டால் எனக்குப் புரியும். அவ்வளவு பேர்களின் பஸ்களையும் எடுத்துக் கொள்ளாதீர்கள்; படிப் படியாக எடுத்துக் கொள்ளுங்கள்; அல்லது தனியார் உரிமையைப் பாதுகாத்துக் கொடுங்கள் என்று சுதந்திராக் கட்சி வாதிட்டால் எனக்குப் புரியும். அதைப்போலவே அதிக வேகமாகச் செல்லாதீர்கள், நிதானமாகச் செல்லுங்கள் என்று காங்கிரஸ் கட்சியோ, அல்லது மற்றைய கட்சியோ எடுத்துச் சொன்னால் எனக்குப் புரியும். நிலச் சீர்திருத்தம் இந்த அளவுக்குப் போதாது, இன்னும் வேகமாகச் செயல்பட வேண்டும், மடங்களின் சொத்துக்களை எல்லாம் அபகரித்துக் கொள்ள வேண்டும், கோவில்களின் சொத்துக்களை எடுத்துக் கொள்ளக் கூடிய அந்த அளவுக்கு சமுதாய சீர்திருத்தம், சோஷலிசம் வரவேண்டும் என்று கம்யூனிஸ்டு வாதிட்டால், எனக்குப் புரியும். விவசாயத் தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு மனை மாத்திரம் சொந்தமாக்கியிருக்கிறீர்கள், போதாது! அவர்கள் வீடு கட்டுவதற்குப் பணம் வேண்டும் என்று கம்யூனிஸ்டு வாதிட்டால் எனக்குப் புரியும். ஆனால், இவைகள் அனைத்தையும் இன்றைக்கு மறந்து விட்டார்கள். என்ன காரணம்? கம்யூனிஸ்டுக்கு இருக்கிற

பயம் என்ன? நம்முடைய கொள்கைகள் அனைத்தையும் திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல்படுத்துகிறது. ஆகவே, நம்முடைய கட்சி, கால் ஊன்ற முடியாத நிலை ஏற்படுகிறது. ஆகவே, கொள்கை ரீதியிலே நம்மோடு வாதிடுவதற்கு அவர்கள் தயாராக இல்லை. அதன் காரண மாகத்தான் லஞ்சம், ஊழல் என்ற வார்த்தைகளைக் கட்டிப் பிடித்துக் கொண்டு ஊரிலே பேசுகிறார்கள். குற்றச் சாட்டுகளை ஆங்காங்கு வாரி வீசுகிறார்கள். தங்களுக்கு வெளியிடத் தைரியம் இல்லாமல் பத்திரிகைகளுக்குக் கொடுக்கிறார்கள். பிறரிடம் சொல்லி, நீங்கள் போய்க் கொடுங்கள் என்று கூறுகிறார்கள். கொள்கைப் போரா? நிலச் சீர்திருத்தம் போதாது என்று கொள்கைப் போரா? தேசிய உடைமைத் தத்துவத்தில் ஓட்டை உடைசல்கள், என்று கொள்கைப் போரா? விதி விலக்கு இன்னும் ரத்து செய்யப்பட வேண்டும் வேகமாக; செய்யப்பட்டிருக் கிற விதிவிலக்குகள் போதாது என்கின்ற கொள்கைப் போராட்டமா? அல்ல. ஆட்சியில் இருக்கிற தி. மு. க. அறிஞர் அண்ணா அவர்கள் 1952-ஆம் ஆண்டில் நடை பெற்ற—சென்னை நகரத்தில் நடைபெற்ற—தி. மு. க. பொது மகாநாட்டில் சொன்னார்கள்; ''தமிழகத்தில் உண்மையான கம்யூனிஸ்டு கட்சி திராவிட முன்னேற்றக் கழகம்தான்'' என்று சொன்னார்கள். அதை இன்றைக்குச் செயல்படுத்தி வருகிறது. இந்த ஆட்சி. இப்படியே நீடித்தால் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு இடமே இல்லாமல் போய்விடும் என்ற பயத்தின் காரணமாக ஊழல், லஞ்சம் என்று பேசிக் கொண்டே இருக்கிறார்கள்.

நிர்வாகத்தில் தலையீடுகள் என்று பேசுகிறார்கள். நிர்வாகத்தில் தலையீடு என்ற குற்றச்சாட்டு—திரு. பக்தவச் சலம் அவர்கள் எழுதிய புத்தகத்தைப் படித்தேன்; 'எனது நினைவுகள்' என்ற புத்தகம். அதிலே அவரது எண்ணத் தைப் பார்த்துக் கொள்ளலாம். 106-வது பக்கம், குறித்துக் கொள்ளலாம். 'காமராஜின் சிபாரிசுகள்' என்கின்ற தலைப்பில் சொல்கிறார்கள்:

### தலையீடு

'' காமராஜ் பல முறை பல விஷயங்கள் பற்றி என்னிடம் சிபாரிசு செய்திருக்கிறார். அவர் சொல்லும் விஷயம் 'தகாதது அல்ல' என்று இருந்தாலும் உடனடியாக அதைச் செய்திருக்கிறேன். சாதாரணமாக நான் செய்யாமல் இருந் திருக்கக்கூடியதைக் கூடக் காமராஜர் சொல்கிறார் என்பதற் காகச் செய்திருக்கிறேன்'' திரு. பக்தவச்சலம் அவர்கள் 'எனது நினைவுகள்' என்ற புத்தகத்தில் 'காமராஜர் சிபாரிசு கள்' என்ற தலைப்பின் கீழ் எழுதிய வாசகங்கள் இவை.

110-ம் பக்கத்தில் இன்னென்று குறிப்பிட்டிருக்கிருர்கள்: '' ஒரு திருட்டு வழக்கில் சம்பந்தப்பட்டவரை விட்டுவிடுமாறு ஒரு எம். எல். ஏ. சப் இன்ஸ்பெக்டரிடம் கூறியிருக்கிருர். சப் இன்ஸ்பெக்டர் அவ்வாறு செய்ய மறுத்து விட்டார். அதற்குப் பிறகு அவர் மீது ஊழல் புகார் கூறி அவரை மாற்ற வேண்டுமென்று அந்த எம். எல். ஏ. வற்புறுத்தி இருக்கிருர். ''

ஊழல் புகார் வருகிறது என்பது அந்த எம். எல். ஏ. காலத்திலும் கடைப்பிடிக்கப்பட்டது. அதற்குப் பிறகு அவர் மீது ஊழல் புகார் கூறி அவரை மாற்ற வேண்டும் என்று அந்த எம். எல். ஏ. வற்புறுத்திக் கூறியிருக்கிருர்.

'' அப்போது விவசாய மந்திரியாக இருந்த கக்கன், அந்த சப் இன்ஸ்பெக்டரை வேறு இடத்திற்கு மாற்றுமாறு ஜில்லா சூப்ரண்டிடம் கூறியிருக்கிருர். நான் தஞ்சாவூர் போயிருந்தேன். (நானல்ல ; அவர் !). இதை ஜில்லா சூப்ரண்ட் என்னிடம் சொன்னுர். நான் அப்போது உள் துறை மந்திரி. அந்த நேர்மையான சப் இன்ஸ்பெக்டரை மாற்ற வேண்டாம் என்று நான் சூப்ரெண்டிடம் தெரிவித்தேன். ''

திரு. பக்தவச்சலம் 'எனது நினைவுகள்' என்ற புத்தகத்தில் கக்கனை ஜாடையாகக் குறை கூறிய வாசகம் இது. ஆகவே, நிர்வாகத்தில் தலையீடுகள் இருந்திருக்கின்றன. பக்தவத்சலம் அவர்களும் நிர்வாகத்தில் தவமுன தலையீடுகள் கூடாது என்பதைத்தான் சொல்லியிருக்கிருர்.

**டாக்டர் எச்.வி. ஹாண்டே :** புத்தகத்தில் கூறியிருக்கிருர்கள் என்று சொன்ஞர்கள். அதே மாதிரி எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களும் உங்களைப் பற்றிக் கூறியிருக்கிருர்கள். எது உண்மை, எது உண்மை இல்லை என்று சொல்ல முடியாது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி :** நான் பக்தவச்சலம் அவர்களைக் குறை கூறிச் சொல்லவில்லை. பக்தவத்சலம் அவர்கள் கூறியதை நான் எடுத்துக் கொண்ட நோக்கமே தவமுன காரியங்களில் நிர்வாகத்தில் தலையீடு கூடாது என்பதுதான். அதைத்தான் பக்தவத்சலம் அவர்களும் அதிலே குறிப்பிட்டிருக்கிருர்கள். அதற்காகத்தான் அதை எடுத்துச் சொன்னேனே அல்லாமல் வேறு இல்லை.

**மூன்று அணிகள்**

ஊழல், ஊழல் என்று பேசப்படுகிறது. தலைவர் காமராஜ் அவர்கள் நேற்றையதினம் அறிவித்துவிட்டார். தெளிவாக, திட்டவட்டமாக அறிவித்துவிட்டார். ஸ்தா

பனக் காங்கிரஸ், தி.மு.க.வைத் தனியாக நின்று எதிர்க்கும்; எதிர்த்து வெற்றி கொள்ளும் என்று திட்டவட்டமாக அறிவித்துவிட்டார். நான் அன்றைக்குச் சொன்ன அந்த மூன்று அணிகள் தமிழகத்தின் எதிர்காலத்தில் பொதுத் தேர்தலில் ஒன்றை ஒன்று நிச்சயம் சந்திக்கும் என்கின்ற நிலைக்கு நேற்றைய தினம் காமராஜ் அவர்கள் பச்சைக் கொடி காட்டிவிட்டார் என்பதுதான் நான் அதற்குக் கொள்கிற பொருள் ஆகும். காங்கிரஸ் கட்சியின் தலைமை யில் உள்ள அணி, ஸ்தாபன காங்கிரஸ் தலைமையில் உள்ள அணி, தி. மு. க. தலைமையில் உள்ள அதன் தோழமைக் கட்சிகள் அணி, இந்த மூன்று அணிகள்தான். இன்று முன்னேற்றக் கழக ஆட்சியில் இருக்கிற கொள்கைக் கோட் பாடுகளைப் பற்றி விமர்சிக்காமல்—காமராஜ்போன்ற பெரும் தலைவர்கள் ஊழல், ஊழல் என்று ஏதோ சொல்லிவிட்டார் களே என்று எண்ணும்போது உள்ளபடியே வருத்தப்படு கிறேன் நான்.

நாம் சில விஷயங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும். காமராஜ் அவர்கள் கன்னியாகுமரித் தொகுதியில் நாடாளு-மன்றத்திற்குப் போட்டியிட்டார்கள். சி. சுப்ரமணியம் அவர்கள் சட்டமன்றத்தில் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். இங்கே நிதி அமைச்சராக இருந்த பொழுது. 'நாம் யாரும் நமக்கு ஆன தேர்தல் கணக்கைச் சபையில் சொன்னால், ஒருவர்கூட எம். எல். ஏ.—ஆக வர முடியாது' என்று திரு. சி. சுப்ரமணியம் அவர்கள் இங்கே ஒத்துக் கொண் டிருக்கிறார்கள்.

காமராஜருடைய நாடாளுமன்றத் தேர்தலின் செலவுக் கணக்குத் அவர் கொடுத்த கணக்காக இருக்க முடியுமா? இப்படிக் கேட்கிற காரணத்தால் உன் சேதி என்ன என்று கேட்க முடியும். ஒருவருக்கொருவர் கேட்டுக் கொண்டே யிருந்தால் ஊழல் எங்கே இருக்கிறது என்பதை யாராலும் புரிந்து கொள்ள முடியாது. ஆகவே, நான் அதைச் சூசக மாக விட்டு விடுகிறேன்.

காமராஜ் அவர்கள் "சமவாழ்வு" என்ற புத்தகத்தில் இந்த ஊழல் லஞ்சம் என்பதைப் பற்றி அழகான மணி வாசகங்களைத் தமிழகத்திற்குத் தந்திருக்கிறார்கள். "சம வாழ்வு" புத்தகம்—பக்கம் 37. அதில் சொல்லுகிறார்:—

"லஞ்சத்தை ஒழித்துவிடுவேன் என்று ராஜாஜி கூறுகி றாரே: அவர் என்ன பரசுராமர் அவதாரமா?"

என்று காமராஜ் கேட்கிறார். பிறகு அவரே—

"லஞ்சம் இல்லை என்று யார் கூறுகிறார்கள்? அந்தக் காலம் முதல் லஞ்சம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் இப்போது கொஞ்சம் அதிகமாகி விட்டது. ராஜாஜி ஆண்ட காலத்தில்

லஞ்சமே இல்லையா என்ன?'' இது காமராஜினுடைய கேள்வி. பிறகு ''சமவாழ்வு'' புத்தகம்—36-ஆம் பக்கம் :

'' ஆயிரம் பேர் போட்டி போட்டுக் கொண்டு லஞ்சம் கொடுக்க வருவதால் அவன் அதை ஏலத்துக்கே விட்டு விடுகிறான் ''

இந்தத் தொல்லை வேண்டாமென்று ஏலம் விட்டு விடுகிறோம்.

'' ஏலம் எடுத்தவன் போக, லஞ்சம் கொடுக்கப் போன மற்ற 999 பேரும் ''லஞ்சம் லஞ்சம்'' என்று கூப்பாடு போடுகிறார்கள். ஏழைக்கு ஒன்றுமே புரியவில்லை.

லஞ்சமா? யார் கொடுக்கிறார்கள்? யார் வாங்குகிறார்கள் என்று விழிக்கிறான். இதற்குக் காங்கிரசா பொறுப்பு?''
இது—காமராஜருடைய கேள்வி. அடுத்து :

'' காங்கிரஸ் அரசாங்கம் வந்தவுடன் ஊழல் வந்து புகுந்து விடவில்லை. அது 5000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இருந்து வருகிறது. காரணங்களைக் கண்டறிந்து இத் தீங்கைக் களைய வேண்டும். ''

5000 ஆண்டுக் காலமாக லஞ்சம் இருந்து வருகிறது என்ற வரலாற்றைக் காமராஜ் அவர்கள் உலகிற்கு உணர்த்துகிறார்கள்.

'' காங்கிரசில் உள்ள கடைசித் தொண்டனாவது இவ்வளவு பணம் வாங்கினான் என்று நிரூபிக்க முடியுமா? நிரூபிக்க முடியாது என்று தெரியும். ஊழல் பற்றிக் கூச்சல் போடுபவர்கள்தான் ஊழல் நிறைந்தவர்கள்'' (பலத்த கைதட்டல்.)

இதை ஒவ்வொருவரும் சுவரொட்டி போட்டு ஒட்டி வைக்க வேண்டும். ''ஊழல் பற்றிக் கூச்சல் போடுகின்றவர்கள்தான் ஊழல் நிறைந்தவர்கள்''. இது காமராஜ் '' சமவாழ்வு '' புத்தகத்தில் எழுதியிருக்கின்ற பொன் மொழிகள். நிரூபிக்க முடியுமா என்று அவர் கேட்கிறார். நிரூபிக்க முடியுமா என்று நாங்கள் கேட்டால் அது தவறாகிறது. காமராஜ் கேட்டார் '' அப்போது லஞ்சம் ஊழல் என்கிறீர்களே, நிரூபிக்க முடியுமா?'' என்று கேட்டார். லஞ்சம் ஊழல் என்று சொல்லியே, இதையே தாரக மந்திரமாக வைத்தே இந்த ஆட்சியை ஒழித்து விடலாம் என்று 71-ல் கங்கணம் கட்டினார்கள். தொடர்ந்து அதையே தான் இன்றைக்கும் சொல்லி வருகிறார்கள். அ. தி. மு. க. அந்தப் பணியை வேகமாகச் செய்கிறது.

ஹாண்டே அவர்களையும் பொன்னப்ப நாடார் அவர்களையும் விட்டு விட்டு, அந்தப் பக்கம் திரும்பினால் கொஞ்சம் மகிழ்ச்சியாக இருக்கும் என்பதற்காக அந்தப் பக்கம் போகிறேன்.

### அ—எதிர்மறை

அ. தி. மு. க., அண்ணா தி. மு. க. என்று அவர்கள் பெயரிட்டு அழைத்தாலும், அ. தி. மு. க. வில் அண்ணா அங்கே இல்லை. அண்ணாவின் கொள்கைகள்—அண்ணாவின் கொள்கையான கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, அண்ணாவின் ஜனநாயக நெறி—இன்றைக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திலே கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. (பலத்த கைதட்டல்.) அ. தி. மு. க. -வில் உள்ள அந்த 'அ' வை முன்னால் சேர்த்தால் சரியான பொருள் வரும். 'அ' முன்னால் சேர்ந்தால் 'நீதி' 'அநீதி' ஆகும். 'தர்மம்' 'அதர்மம்' ஆகும், 'நியாயம்' 'அநியாயம்' ஆகும். அ. தி. மு. க. என்பது தி. மு. க. கொள்கைக்கு எதிரானது. (கைதட்டல்.) அதை நாம் புரிந்து கொண்டாக வேண்டும். ஆகவே அ. தி. மு. க. என்பது அண்ணாவுக்கு விரோதமாக, தமிழகத்திற்கு விரோதமாக, தி. மு. கழகத்தின் கொள்கையான மாநில சுயாட்சித் தத்துவத்திற்கு விரோதமாக இன்றையத் தினம் செயல்பட்டு வருகின்ற ஒரு புதிய கட்சியாகும். அந்தப் புதிய கட்சி எத்தனை நாளைக்கு இருக்கும் என்றைக்கு அது இந்திரா காங்கிரசோடு இணையும், என்பதெல்லாம் வேறு விஷயம்!

### மிரட்டல்

ஆனால், இன்றைக்குத் தமிழ் நாட்டிலே திராவிட முன்னேற்றக் கழகத்தை, அதுவும் முன்னணியிலே இருக்கிற முக்கியமானவர்களை மிரட்டி, டெல்லியில் இருக்கிற அதிகாரங்களைக் காட்டிப் பணிய வைத்து விடலாமென்று நடைபெறுகின்ற முயற்சிகளை, இந்த மாமன்றத்தில் இருக்கிற எதிர்க்கட்சிக்காரர்களும் நம்மோடு சேர்ந்து எதிர்ப்பார்கள் என்பதில் எனக்குக் கிஞ்சிற்றும் ஐயமில்லை. காலையில் நம்முடைய நண்பர் அரங்கண்ணல், குடிசை மாற்று வாரியத்தின் தலைவர், மிக்க வேதனையோடு தனக்கு விளைவிக்கப்பட்ட ஒன்றை எடுத்துச் சொன்னார்கள். டெல்லியில் டெக்னிக்கல் எர்ரருக்காக 4,000, 5000 அபராதம் போட்டார்கள். அவர் அதற்கு அப்பீல் செய்து வாதாடப் போகிறார். இன்கம்டாக்ஸ் ஆபீசர் ரெய்டு நடத்துகிறார். மறுநாள் கவர்னர் என்னிடம் கேட்கிறார். 20 லட்சம் ரூபாய் அரங்கண்ணல் வீட்டிலிருந்து எடுத்து விட்டார்களாமே என்று கவர்னர் என்னிடம் கேட்கிறார். அவரைப் பார்த்து பக்தவத்சலம் கேட்கிறார் 12 லட்சம் எடுத்து விட்டார்களாமே என்று. பத்திரிகையில் செய்தி வருகிறது. அரங்கண்ணல் வீட்டில்

ரெய்டு ; பெரிய சோதனை ; 20 லட்சம் எடுத்து விட்டார்கள் என்ற செய்தி வருகிறது. இப்படி நான் டெல்லியிலே இருக்கின்றவர்களை இந்த நேரத்தில் குற்றம் சாட்ட விரும்பவில்லை. கீழே இருக்கின்ற குட்டித் தேவதைகள், அந்தத் தேவதைகளைப் பிடித்து ஆட்டிப்படைக்கின்ற தமிழ் நாட்டில் இருக்கக் கூடிய சில தேவதைகள் இந்தக் காரியத்தில் ஈடுபடுகிறார்கள். 4, 5 நாட்களுக்கு முன்பு கோவை மாவட்டத்தில் செயலாளர் ராஜமாணிக்கம் அவர்களுடைய வீட்டில் வருமானவரி அதிகாரிகள் திடீரெனப் பிரவேசித்தார்கள். அரங்கண்ணல் வீட்டில் இன்கம்டாக்ஸ் அதிகாரிகள் எடுத்த தொகை வெறும் 60 ரூபாய். ராஜமாணிக்கம் வீட்டில் சென்று அவர்கள் சோதனை நடத்தினார்கள். அங்கே ஆயிரம் ரூபாய்க்கு நகைகள் இருந்தன. அந்த ராஜமாணிக்கம் அவர்கள் இன்று, நேற்றல்ல; பல ஆண்டுக் காலமாகக் கோயம்புத்தூரில் திராவிட முன்னேற்றக் கழகத்தை வளர்த்து வருகின்றவர். இன்னும் சொல்லப் போனால் சிங்காநல்லூரில் 40 ரூபாய் வாடகைக்கு நான் ஒரு வீட்டில் குடியிருந்துகொண்டு, அரிசிக்குக் கஷ்டப்படுகின்ற நேரத்தில், என்னுடைய வீட்டிற்கு அரிசி கொண்டு வந்து கொடுத்து என்னுடைய வீட்டில் பொங்க வைக்கின்ற அளவுக்கு அன்றைய தினம் வசதி படைத்திருந்தவர். ஒரு கடையில் குமாஸ்தாவாகப் பணியாற்றிச் சம்பாதித்தார். அவருக்கு, அவருடைய கழகப் பணியைக் கௌரவிப்பதற்காக கோவை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தார் நிதி வசூல் செய்து, என்னை அழைத்து 40 ஆயிரம், 45 ஆயிரம்—நேற்று கக்கன் அவர்களுக்கு 20 ஆயிரம் ரூபாய் கொடுத்தார்களே—அதைப்போல், அன்றைக்கு ராஜமாணிக்கத்திற்கு 45 ஆயிரம் ரூபாயைக் கொடுத்து ஒரு வீடு வாங்கித் தந்தோம். அந்த வீட்டிற்கு வாங்கிய பத்திரம் அவருடைய வீட்டில் இருந்திருக்கிறது. அதைப் பற்றி பஞ்சன் லாமாவோ, தலைலாமாவோ; அந்தப் பஞ்சன் லாமா பத்திரத்தை அவர்கள் கேட்டிருக்கிறார்கள். 47 ஆயிரம் ரூபாய் பத்திரம், ஆயிரம் ரூபாய் பணம் இதைக் கைப்பற்றவில்லை. கொடுத்து விட்டுப் போய் விட்டார்கள். ஆக இப்படி முன்னேற்றக் கழகத்திலே யார், யார், எங்கெங்கே தூண்களாக இருக்கிறார்களோ, அவர்களை எல்லாம் மிரட்டுவது என்ற அளவுக்கு வருமான வரி இலாகா அவர்களுடைய கையிலிருக்கிறது என்கின்ற காரணத்தால், என்போர்ஸ்மெண்ட் தங்கள் கையில் இருக்கிறது என்ற காரணத்தினாலும், இன்றைக்குச் சில பேரைப் பணிய வைக்கலாம் என்று கருதியிருக்கிறார்கள். அவர்கள் தேடிப் பார்த்துப் பணத்தைக் கைப்பற்ற வேண்டிய இடங்கள் தமிழகத்திலே ஏராளமாக இருக்கின்றன. அங்கேயெல்லாம் என்ன செய்கிறார்கள் தெரியுமா? சமரசம் பேசிக் கொள்கிறார்கள். கட்சியிலிருந்து வெளியே வருகிறாயா, விட்டு விடுகிறோம். கட்சியை இரண்டாக ஆக்குகிறாயா, விட்டு

விடுகிறோம் என்ற சமரசப் பேச்சு. ஒரு நண்பருடைய வீட்டிற்குச் சென்று யார் அந்நிய செலாவணிக் குற்றச்சாட்டைக் கண்டு பிடித்தார்களோ, அதே அதிகாரி அந்த நண்பருக்கு நீங்கள் இந்த அலுவலகத்திற்கு இந்த மாதிரி பதில் எழுதுங்கள் என்று சொல்லிக் கேட்கிறார். இந்த அளவுக்கு நிலைமை அங்கே.

பிரதமருக்கு....

நான் இவைகளையெல்லாம் தமிழ்நாட்டு மக்களின் சார்பாக, தமிழ்நாட்டு மக்களுடைய உணர்ச்சியின் சார்பாக, இந்தியாவின் பிரதமர் இந்திரா காந்தி அவர்களுக்கு எடுத்துக் கூறுவது கடமை என்பதற்காகச் சொல்கிறேன். அரசியல் வாழ்வில் இருப்பவன் மீதெல்லாம் களங்கம் சுமத்தப்படுகிற காரணத்தால் அந்தக் கட்சியை அழித்து விட முடியுமா? களங்கம் சுமத்தினால் மக்கள் தீர்ப்புத் தர வேண்டாமா? ராஜமாணிக்கத்தின் வீட்டில் ரெய்டு நடத்துவது, மறுநாள் பத்திரிகையில் ராஜமாணிக்கத்தின் வீட்டில் சோதனை, பல லட்சம் ரூபாய் கைப்பற்றப்பட்டது என்ற செய்தியைப் போடுவார்கள், ராஜமாணிக்கத்தைக் களங்கப்படுத்த வேண்டும், என்று செய்தியைப் போடுவார்கள். கோவை மாவட்டத்தில் கழகத்தின் பலத்தைக் குறைத்து விடவேண்டும் என்று இப்படிப்பட்ட காரியங்களில் இன்றைக்கு இங்கிருக்கக் கூடிய வருமானவரி அதிகாரிகள், என்போர்ஸ்மெண்ட் அதிகாரிகள் போன்றவர்கள் ஈடுபடுவார்களானால் திராவிட முன்னேற்றக் கழகம் அவைகளைச் சந்திக்க வேண்டிய இடத்தில் சந்தித்துத் தீரும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இவைகளையெல்லாம், நிதானமாக நான் உணர்ச்சி வேகத்தில் பேசுகிறேன் என்று கருதாமல், பிரதமரைப் போன்றவர்கள், டெல்லியில் இருக்கும் முக்கியமானவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்தக் காரியங்களை யார் நடத்துகிறார்கள். யார் தூண்டுதலின் பேரில் இது நடைபெறுகிறது, அவர்கள் இன்றைக்கு ஆளும் காங்கிரஸ் கட்சிக்கும், கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இந்த நாட்டிலே இருக்கிற சில கட்சிகளை அடகு வைக்க எண்ணி, பிறகு இந்த நாட்டையும் வேறு ஒரு நாட்டிற்கு அடகு வைப்பதற்கு, இன்றைக்குப் பேரம் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் பகிரங்கமாக எடுத்துச் சொல்லமுடியும். ஆகவே இதில் தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் விழிப்பாக இருக்க வேண்டும் என்பதையும் நான் இந்த நேரத்தில் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முன்னேற்றக் கழகம் மக்களுடைய செல்வாக்கை இழந்து விட்டது. ஆகவே அந்தக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலிருந்து இறங்க வேண்டும் என்று டாக்டர் ஹாண்டே அவர்களும், பொன்னப்ப நாடார் அவர்களும் விவாத நேரத்தில் எடுத்துச்

சொன்னார்கள். காரணம் உங்களோடு இருந்த கட்சிகளெல்லாம் பிரிந்து போய்விட்டன. ஆகவே நீங்கள் ராஜினமா செய்து விடுங்கள். உங்களுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கில்லை என்றெல்லாம் சொன்னார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன். சில கட்சிகள் போய்விட்டாலும், ஆளும் காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சி இவர்கள் போய் விட்டார்கள். நான் மறுக்கவில்லை.

## குழம்பிலிருந்து விழுந்தவை

குழம்பு வைக்கின்றோம். அந்தக் குழம்பிலிருந்து ஒரு கத்தரிக்காய், வெண்டைக்காய்த் துண்டு வெளியே விழுந்து விட்டால், குழம்பை எடுத்து அப்படியே கொட்டி விட மாட்டோம். அதைப்போல்தான் 71-ல் குழம்பு வைத்தோம். அந்தக் குழம்பில் முஸ்லீம் லீக் புளியாக இருந்தது. பார்வர்ட் பிளாக் காரமான கட்சி— காரமான மிளகாயாக இருந்தது. தமிழ் அரசுக் கழகம் சின்னக் கட்சி என்று சொன்னாலும் உப்பாக இருந்தது. திராவிட முன்னேற்றக் கழகம் வைத்த குழம்பில் கத்தரிக் காயாக, வெண்டைக்காயாக இந்திரா காங்கிரஸும், கம்யூனிஸ்ட் கட்சியும் இருந்தன. பரிமாறுகிற நேரத்தில் இரண்டு துண்டு கீழே விழுந்து விட்டது. அதற்காகப் புளியும், உப்பும், காரமும் இன்னும் வேறு பண்டங்களும் இருக்கின்ற குழம்பை ஊற்றி விட வேண்டுமா? வீட்டிலே குழம்பு வைத்துச் சாப்பிட்டுப் பழக்கமுள்ள ஹாண்டே அவர்கள் பொன்னப்ப நாடார் அவர்கள் (அவர்கள் வைக்கவில்லை, வீட்டில் வைத்த சாப்பாட்டில்) இதை உணராமல் இல்லை.

ஆகவே, இரண்டு துண்டுப் பதார்த்தங்கள் கீழே விழுந்து விட்டன என்பதற்காகச் சமைத்தது முழுவதையும் கொட்டி விடு என்றால் முடியாது. டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். எம்.ஜி.ஆர். மட்டும் போகவில்லை, அவரோடு 50 சதவீதம் பேர் போய்விட்டார்கள் என்று சொன்னார். அது எவ்வளவு தவறான கருத்து என்பதை விளக்க விரும்புகிறேன்.

1957-ல் கழகம் போட்டியிட்ட இடங்கள் 117. அப்போது எம்.ஜி.ஆர். இளமை முறுக்குடன் 'மதுரை வீரன்' படம் நடந்து, அதனால் மதுரை வீரன் என்ற பெயரைப் பெற்றிருந்த சமயம். அந்தக் காலத்திலே தேர்தல் பிரச்சாரம் செய்தார். அப்போது கழகத்திற்குக் கிடைத்த இடம் 15. டிப்பாசிட் இழந்த இடம் 40. 1962 பொதுத் தேர்தலிலும் முன்னேற்றக் கழகம் போட்டியிட்டது. போட்டியிட்ட இடங்கள் 142. கழகம் வெற்றி பெற்ற இடங்கள் 50. அப்போதும் எம்.ஜி.ஆர். புயல் வேகத்தில் பிரச்சாரம் செய்தார். அப்படி இருந்தும் கிடைத்த இடம் 50 தான்.

அதற்குப் பிறகு 1967 பொதுத் தேர்தலில் கழகம் 173 இடங்களில் போட்டியிட்டது. 138 இடங்களில் வெற்றி பெற்றது. அப்போது எம்.ஜி.ஆர். பிரச்சாரம் செய்ய வரவில்லை. அவர் மருத்துவ மனையில் இருந்தார். ஆனால் அவருடைய போஸ்டரைப் போட்டுப் பிரச்சாரம் செய்தார்கள் என்று சொன்னார்கள். போஸ்டர் போடப்பட்டது உண்மை. ஆனால் அதை நாங்கள் போடவில்லை. ஹாண்டே அவர்களுக்குச் சத்தியத்தின் மீது நம்பிக்கை இருந்தால்—சத்தியமாகச் சொல்கிறேன்—எம்.ஜி.ஆர். தொகுதிக்காக அவர்களே போஸ்டர் போட்டார்கள். அதில் ஒரு தொகுதிக்கு 4, 5 போஸ்டர்கள் அனுப்பி, சுவர்களில் ஒட்டி வைத்திருந்தார்கள். 1957-ல் 15 இடம், 1962-ல் 50 இடம், 1967-ல் 138 இடம் என்றால் எங்கள் வெற்றி நாவலர் அவர்களும், பேராசிரியர் அவர்களும், என்.வி.என் அவர்களும் மற்றும் உள்ள அமைச்சர் பெருமக்களும், கழகத் தலைவர்களும், கழகத்தின் செயல் வீரர்களும், கழகக் கண்மணிகளும் ஆற்றிய தொண்டுதான் என்பதை எடுத்துக் கூறக் கடமைப்பட்டவனாக நான் இருக்கிறேன்.

## குலையவில்லை !

இவைகளை எல்லாம் எதற்காக நான் குறிப்பிடுகிறேன் என்றால்—திராவிட முன்னேற்றக் கழகம் படிப்படியாக, மெல்ல மெல்ல, ஆனால் உறுதியாக வளர்ந்து வந்திருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் என்பதல்லாமல் வேறல்ல. ஹாண்டே அவர்கள் கூறியதுபோல் கழகத்தின் கட்டுக்கோப்பு அழிந்து விடவில்லை. அந்தக் கட்டுக்கோப்புக் குலையாமலேயே கழகம் இன்றும் இருக்கிறது. 18 ஆயிரம் கிளைக் கழகங்களில் 20 அல்லது 25 கிளைக்கழகங்கள் வேண்டுமானால் பிரிந்து போயிருக்கும். அவை தவிர மற்றக் கிளைக்கழகங்கள் எல்லாம் கட்டுக்கோப்புக் குலையாமல் அப்படியே இருக்கின்றன. வட்டச் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள், வட்டப்பிரிவு, மாவட்டப்பிரிவு, மாநில அமைப்பு, பொதுக்குழு, செயற்குழு எல்லாம் கட்டுக்கோப்புக் குலையாமல் அப்படியே இருக்கின்றன. எப்படிக் காங்கிரஸ் கட்சியில் பெரும் புயல் வீசிய நேரத்திலும் தமிழ் நாட்டில் ஸ்தாபன காங்கிரஸ் கட்டுக்கோப்புக் குலையாமல் இருந்ததோ, அப்படியே எம்.ஜி.-ஆரும் ஒருசிலரும் போய் விட்டபோதிலும் கழகம் கட்டுக்கோப்புக் குலையாமல் அப்படியே இருக்கிறது.

அண்மையில் என்னை பம்பாய் பத்திரிக்கைக்காரர் ஒருவர் பேட்டி கண்டார். திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து எம்.ஜி. ஆரும் இன்னும் சிலரும் பிரிந்து போய்விட்டதால் கழகத்தில் பூசல் ஏற்பட்டுக் கழகம் பலவீனம் அடைந்திருக்கிறதாமே என்று கேட்டார். அப்போது நான் அவருக்குக்

கோபம் வராத வகையில் கேலியாக ஒன்றைச் சொன்னேன். கடலிலே இருந்து சூரிய வெப்பத்தினால் கடல் நீர் ஆவியாக மாறிச் செல்வதைப்போல் சிலர் போய் இருக்கிறார்கள் என்று சொன்னேன். நான் ஏன் அவ்வாறு சொன்னேன் என்றால், கடலிலே இருந்து ஆவியாகச் சென்ற நீர், குளிர்ந்து மழையாகப் பெய்து, பூமியிலே விழுந்து திரும்பவும் கடலிலே வந்து சேரும். அதைப் போலவேதான் ஒருவரால் வெளியே போனவர்கள் இப்போது இங்கும் வராமல், அங்கும் இருக்க மாட்டாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள், இறுதியில் இங்கே வந்து சேருவார்கள் என்று நம்புகிற காரணத்தால் தான் அப்படிச் சொன்னேன்.

### தீர்மான நோக்கம்

இன்றைக்கு இந்த நம்பிக்கை கோருகின்ற தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பதன் நோக்கமே, நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தில் பேசுவதற்கு விரும்பிய அங்கத்தினர்களுக்கு, அவர்களின் கருத்துக்களைச் சொல்வதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கட்டும் என்பதற்காகத்தானே அல்லாமல் வேறல்ல. இந்த நம்பிக்கை கோரும் தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு நான் நன்றி தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. அதைப் போலவே முஸ்லீம் லீக் கட்சி, பார்வர்டு பிளாக் கட்சி, தமிழரசுக் கழகம் ஆகிய கட்சித் தலைவர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் தோழமைக் கட்சியினர் என்ற காரணத்தினால் நன்றி தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் நான் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்த் தரப்பிலே இருக்கின்ற—ஜனநாயகத்தின் மரபையும் சபையின் கௌரவத்தையும் காப்பாற்றுகின்ற வகையில்—மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்களுக்கும் அவருடைய கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும், அதைப்போலவே சுதந்திராக் கட்சியைச் சேர்ந்த டாக்டர் ஹாண்டே அவர்களுக்கும் அவருடைய கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நம்பிக்கை கோரும் தீர்மானத்தை எதிர்த்துப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் ஒன்றைச் சொல்லிக் கொள்வேன். நாங்கள் இப்போது ராஜினாமாச் செய்ய வேண்டியதில்லை. எங்களைக் கொஞ்சம் பணியாற்ற விடுங்கள். ஐந்தாண்டுக் காலம் முடிந்ததும் தேர்தல் வரும். அப்போது நாம் எல்லாம் போட்டியில் கலந்து கொள்ளலாம். மக்கள் யாரை நம்புகிறார்களோ அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளலாம். அதுவரையிலும் கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள். பதவியே பெரிதென்று நாங்கள் இங்கே ஒட்டிக் கொண்டிருக்க வேண்டுமென்று விரும்பவில்லை. நாங்கள் முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கும்போது பெரிய செல்வந்தர்களாகவோ, கனதனவான்களாகவோ இல்லை,

சாதாரண விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்தான்; கொள்கைப் பிணைப்பால் எங்கெங்கோ இருந்து வந்து ஒன்றாகச் சேர்ந்தோம், ஒரு ஏழைக் குமாஸ்தாவின் மகன் தான் நாவலர் அவர்கள். ஒரு சாதாரணப் புத்தக வியாபாரியின் மகன்தான் பேராசிரியர் அன்பழகன் அவர்கள். காங்கிரஸிலிருந்து அச்சுக்கூடம் வைத்து அச்சடித்துக் கொண்டிருந்தவர் தான் என்.வி.என். அவர்கள். இப்படிப்பட்டவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து தான் கழகத்தை உருவாக்கினோம். இன்றைக்கு 18 ஆயிரம் கிளைக் கழகங்களுக்குச் சொந்தக்காரர்களாக இருக்கிறோம்.

சேலத்திற்குப் போயிருந்தேன். அங்கே கழக நண்பர் தாவீது என்பவர் இறந்து விட்டதாகக் கேள்விப்பட்டுப் பார்க்கப் போயிருந்தேன். அவருடைய வீட்டைப் பார்த்தால் கூரை சரிந்திருந்தது. பின், நிதி வசூல் செய்து, பிணத்தை எடுத்தோம். இப்படித்தான் கழகத் தோழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் மாற்றுக் கட்சியினர் எண்ணிப் பார்த்திட வேண்டும். எங்களை ஐந்தாண்டுக் காலம் வாழ விட்டாலும் சரி, அல்லது ஐந்தாண்டுக் காலம் ஆள விட்டாலும் சரி, நாங்கள் இந்த நாட்டு ஏழை எளிய மக்கள் வாழ வேண்டும் என்பதிலே உள்ள எங்கள் லட்சியத்தோடு பணிபுரிகிறோம்; மேலும் பணிபுரிவோம் என்பதை மிகத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன். சமுதாயத்திலே பின்தங்கிய மக்கள், ஏழை எளிய மக்கள், அரிசன மக்கள், நடுத்தர மக்கள், விவசாயப் பெருங்குடி மக்கள் இவர்கள் வாழ்க்கையை உயரச் செய்வதே எங்கள் இலட்சியப் பணி. என்னைப் பொறுத்த வரையிலே நான் இராஜாஜி அவர்களைப் போன்றோ அல்லது தந்தை பெரியார் அவர்களைப் போன்றோ நீண்ட நாள் வாழ்வேன் என்று நினைக்கவில்லை. என் உடலிலே அந்த அளவுக்கு வலிவு இல்லை. பேரறிஞர் அண்ணா அவர்களைப் போல 59 வயதில் போனாலும் போவேன், அல்லது 49 வயதில் போனாலும் போவேன். அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால் என்னுடைய கடைசி நிமிட மூச்சு இருக்கும் வரையில் தமிழ்ச் சமுதாயத்திற்காக, ஏழை எளிய மக்களுக்காகப், பாட்டாளி மக்களுக்காகப் பாடுபடுவேன் பாடுபடுவேன், என்று கூறி முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

**திரு ஆர். பொன்னப்ப நாடார்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் 'கமிஷன் ஆப் என்குயரி' வைக்க வேண்டும் என்று கேட்டோம். விசாரணை நடத்துவதற்கு அந்த கமிஷனை அமைப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதைச் சட்ட மன்றத்திலே வைக்கப்படும் உத்தேசம் உண்டு.

**(திரு ஆர். பொன்னப்ப நாடார் எழுந்தார்)**

மாண்புமிகு திரு க. அன்பழகன் : மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் ஒரு உறுப்பினர் மட்டுமல்ல, ஒரு வழக்கறிஞரும் கூட. மற்ற உறுப்பினர்கள் கேட்டால் தெரியாமல் கேட்கிறார்கள் என்று நினைத்துக் கொள்ளலாம். இதில் 'பிரிமா பேசி' (Prima facie) கேஸ் இல்லாமல் கமிஷன் ஆப் என்குயரி வைக்க முடியாது என்பதை அவர்கள் அறிந்திருந்தும் அப்படிக் கேட்பது பொருத்தமுடையதாக இல்லை.

திரு ஆர். பொன்னப்ப நாடார் : இதில் பிரிமா பேசி கேஸ் இருக்கிறதா, இல்லையா என்பதல்ல பிரச்சினை. இந்த அமைச்சரவை மீது பரவலாகப் பல குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. அவைகளை விசாரிக்க கமிஷன் ஆப் என்குயரி அமைக்கப்படுமா என்றுதான் நான் கேட்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, விசாரணைக் கமிஷன் வேண்டுமா, வேண்டாமா என்பதை அறிய அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லாம் விரும்புகின்றார்களா? விசாரணைக் கமிஷன் அமைக்க வேண்டும் என்பதை வாக்கெடுப்புக்கு விட்டு, அவர் கட்சிக்காரர்கள் ஆதரிக்கிறார்களா என்பதை அறிந்து கொள்ளலாம். தீர்மானத்தை வாக்கெடுப்புக்கு விடலாம்.

திரு ஆர். பொன்னப்ப நாடார் : நான் கேட்பது 'கமிஷன் ஆப் என்குயரி'. 1952-ஆம் ஆண்டுச் சட்டப்படி கமிஷனை அமைக்க மாநில அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது. மத்திய அரசாங்கத்திற்கும் அதிகாரம் இருக்கிறது. சட்டத் துறை அமைச்சர் அதை ஒப்புக் கொண்டிருக்கிறார்; நாங்கள் இவ்வளவு வற்புறுத்தியும் 'கமிஷன் ஆப் என்குயரி' வைப்பதற்கு முடியாது என்று தெரிவித்துவிட்டதால் இந்த முடிவை எதிர்த்து எங்கள் கட்சி வெளியேறும் என்று சொல்லி நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

Dr. H.V. HANDE : Sir, to show, that there is no relationship or bearing between the fictitious and imaginary majority inside the House and the tremendous unpopularity of this Government outside this house, we are walking out.

(Members of the Congress (O) party & members of the Swathanthra party then staged a walk-out)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஸ்தாபன காங்கிரஸ் தோழர்களும், சுதந்திராக் கட்சியின் தோழர்களும், நம்மை எதிர்க்காமல் நடுநிலைமையாக இருந்தார்கள் என்று எடுத்துக்கொண்டு இந்த நம்பிக்கைத் தீர்மானத்தை அவர்களும் ஆதரித்தார்கள் என்ற வகையில் அவர்களுக்கு நன்றியைக் கூறிக் கொள்கிறேன்.

வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவை முன்னுள்ள கேள்வி "திரு மு. கருணாநிதி அவர்களை முதலமைச்சராகக் கொண்ட அமைச்சரவை மீது இப்பேரவை தனது நம்பிக்கையைத் தெரிவிக்கிறது".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

**திருப்பூர் ஏ. எம். மொய்தீன் :** தலைவர் அவர்களே! எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று கோருகிறேன்.

எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு அதில் உறுப்பினர்கள் கீழ்க்கண்டவாறு வாக்களித்தனர்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தீர்மானத்திற்கு ஆதரவாக 172 பேர்கள் வாக்களித்துள்ளனர். எதிர்த்தவர்கள் எவரும் இல்லை. நடுநிலை வகித்தவர்கள் எவரும் இல்லை. ஆகவே, தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கிறேன். இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைகின்றன. பேரவை மீண்டும் 12—12—1972-ஆம் நாள் காலை 9 மணி அளவில் கூடும்.

பின்னர் பேரவை ஒத்தி வைக்கப்பட்டது.

CONNEMARA PUBLIC LIBRARY
7 JAN 1973
MADRAS

தமிழரசு

1—1—1973 இதழின்

# இலவச இணைப்பு

P56

# தமிழரசு

## இலவச இணைப்பு

R.F-60